# தமிழரசு

1.6.1997 ரூ.3






சென்னை-கலைவாணர் அரங்கில் 16.5.97 அன்று நடைபெற்ற 1995ஆம் ஆண்டுக்கான மாநிலத் திரைப்பட விருது வழங்கு விழாவில், மேதகு ஆளுநர் நீதிபதி ஃபாத்திமா பீவி அவர்கள் திருமதி சந்திரலீலா பாரதிராஜாவுக்கு விருது வழங்குகிறார். விழாவில், தென் மாவட்டக் கலவரங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்க முதலமைச்சர் நிவாரண நிதிக்கு திரு. ரஜினிகாந்த் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ரூ.5 இலட்சத்துக்கான காசோலை வழங்கினார். மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன் அவர்கள் உடன் இருந்தார்.



## இந்த இதழில்...


- அன்பு கொள்வோம் ... 2
  - முதல்வர் கலைஞர்
- அமைதி காத்திடுவீர் ! ... 4
  - முதல்வர் உரை
- பட்டியல் இனத்தவர்களுக்குப் பிளாஸ்டிக் சிறப்புப் பயிற்சி ... 7
- சாதி வேறுபாடு இன்னும் தவிர்ந்திலையோ ? ... 9
- ஞானம் - சிறுகதை ... 13
  - அகிலன் கண்ணன்
- நன்மைகள் கோடியடா ! ... 17
  - தஞ்சை பாண்டியன்
- பிணி தீர்க்கும் திருநீற்றுப் பச்சிலை ... 18
  - டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்
- நூற்புழுக் கட்டுப்பாடு ... 22
- எங்கள் ஊர் பிரச்சினை ... 24
- சுற்றுப்புறச் சுகாதாரம் ... 33
- ஆதிதிராவிடர் - பழங்குடியினர் பெறும் கல்வி உதவிகள் ... 42
  - திரு.சி.வி. சங்கர், இ.ஆ.ப.,
- ஆசிரியர் மடல் ... 48



**தமிழரசு**

*திருவள்ளுவராண்டு : 2028*

*வைகாசித் திங்கள் : 18*

*மலர் : 23* *இதழ் : 23*

**1-6-1997**

**ரூ. 3**

# அன்பு கொள்வோம்!

அன்பின் வழியது உயிர்நிலை என்பது
ஆதிமகன் வள்ளுவன் சொல்லாம்!

அன்று சிலுவை சுமந்தவர், நெஞ்சில்
அன்பைச் சுமந்தவரே!

போதி மரத்து நிழல்தானே
மேதினி எங்கும் அன்பாய் மேவியது!

நன்னெறி நாயகம்
நபிகள் நாயகம் அன்புக்கு நாயகமே!

அன்பே சிவம் - இது சைவத் திருமறை!
அன்பின் அடிப்படையே அக்கால வைணவமும்!



அன்புக்குப் பல வழிகாட்டிகள் உண்டெனினும், மத
வம்புக்கு நம்மிடையே பஞ்சமில்லை.

வன்முறைக்கு வாய்க்கால் வெட்டி
நித்த நித்தம் ரத்தத்தால் பாசனம் செய்கின்ற



பாழும் உள்ளங்கள் பக்குவப்படுவதற்கே
"அன்பு கொள்வோம்" எனும் தலைப்பில்
அணை கட்டுகின்றோம்.

அன்புபற்றி அயலார்க்கு அறிவுரை கூறிவிட்டு
அதற்கெதிராய் நடக்கின்ற
என்பு தோல் போர்த்த மனிதர்கள் சிலருண்டு-
அவரையெல்லாம் அடையாளம் கண்டு,
அவனிக்குச் சொல்லிவைத்தல் பெரும் தொண்டு.
நல்லதையும் கெட்டதையும் நன்றாக ஆய்ந்தறிந்து
நாட்டுமக்கள் தெளிவடைந்துள்ள காலமிது - எனினும்

விழித்துக் கொண்ட மக்களையும் - மீண்டும்
வீழ்த்துதற்கு வேடதாரிகள் புறப்படுவர் இன்று! அந்த
மாரீச மான் குட்டிகளை முதலிலேயே மடக்கிப் போடல் நன்று!



## - முதல்வர் கலைஞர்

- புத்தாண்டுக் கவியரங்கத்திற்குத்
தலைமை ஏற்று பாடிய கவிதையிலிருந்து
நன்றி : 'சன் டி.வி.'

# அமைதி காத்திடுவீர்!

**- முதல்வர் கலைஞர்**

‘ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து, மிகமிகப் பொதுவான ஒரு பிரச்சினை குறித்து கலந்து பேசி, நல்ல முடிவுகளை எடுக்கவும், மாநிலம் தொடர்ந்து அமைதியாகத் திகழ்ந்திடவும்,



நாம் எல்லாம் இங்கே கூடியிருக்கிறோம். அந்த உணர்வோடு இந்த மன்றத்தில் கருத்துப் பரிமாற்றங்கள் இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன்; இருக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். தனிப்பட்ட முறையிலே ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் இடையிலும் பல்வேறு கொள்கை வேறுபாடுகள், மாறுபாடுகள் உண்டு.

அதைப்போலவே, சமுதாயத் தலைவர்களிடத்திலேகூட அத்தகைய வேறுபாடுகள் மாறுபாடுகள் உண்டு.

அவற்றை எல்லாம் கொள்கை ரீதியாக அரசியல் கட்சிகள் அறவே அகற்றிடவும், அந்தந்தச் சமுதாயத் தலைவர்கள் அந்தச் சமுதாயத்தின் மீதுள்ள பற்றை அறவே நீக்கி விடுவதற்காகவோ, எந்தவிதமான வற்புறுத்தலும் இந்தக் கூட்டத்தில் இருக்கப் போவதில்லை. அமைதி குலைவதற்கான சூழ்நிலைகள் உருவாகாத வண்ணம், எப்படித் தடுப்பது, உருவானவற்றை எவ்வாறு தவிர்ப்பது என்பதைப் பற்றித்தான் இங்கே நாம் விவாதிக்க இருக்கின்றோம். விவாதித்து ஒரு நல்ல முடிவை நாம் மேற்கொள்ளவேண்டும் என்ற தூய எண்ணத்தோடு நாம் இங்கே குழுமி இருக்கின்றோம்.

தமிழ்நாட்டில், வட மாநிலங்களைப் போல ஜாதி மதக் கலவரங்கள் பெருமளவில் இல்லை என்றாலும்கூட, குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவிற்கு இடையிடையே, அத்தகைய மோதல்கள், சர்ச்சைகள், கலவரங்கள் அதன் காரணமாகச் சாவுகள், படுகொலைகள் நடந்துகொண்டு இருக்கின்றன என்பதை யாரும் மறந்துவிடுவதற்கு இல்லை.

அது எந்த ஆட்சியிலும் நடைபெற்றிருக்கிறது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஆட்சிக் காலத்திலானாலும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலானாலும், என்னுடைய அருமை நண்பர்



எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலானாலும், கடந்த ஆட்சிக் காலத்திலானாலும் இன்றைக்கும் அத்தகைய ஜாதி மோதல்கள் மதக் கலவரங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

முதுகுளத்தூர் கலவரத்தை நாம் மறந்து விட முடியாது.

கீழ்வெண் மணியிலே நடைபெற்ற கொடிய சம்பவத்தை யாரும் மறந்துவிடஇயலாது.

இவைகள் எல்லாம் ஜாதி வேறுபாடு, ஜாதி ஆதிக்கம், இவற்றின் கார்ணமாக ஏற்பட்ட கலவரங்கள், கொடுமைகள் என்பதை நாம் என்றைக்கும் நினைவிலே கொண்டுதான் இருக்கின்றோம்.

கடந்த காலத்திலேகூட, 5, 6 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் ஜாதி மதக் கலவரங்கள், சம்பவங்கள் என்று எடுத்துப் பார்த்தால், 645 சம்பவங்களும், 293 பேர்கள் அதிலே கொல்லப்பட்ட நிகழ்ச்சியும் அந்த 5 ஆண்டுக்காலத்திலே, கடந்த காலத்திலே நடைபெற்று இருக்கின்றன. நான் ஒப்பிட்டுக் காட்டி இந்த ஆட்சியில், அந்த அளவிற்கு இல்லை என்று வாதாட விரும்பவில்லை. அந்த எண்ணம் எனக்கு இல்லை. இந்த ஆட்சியிலும் ஜாதி மதக்கலவரத்தால் இதுவரையில் 20-க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள்.

எனவே, இது, தொடர் சம்பவமாக ஒவ்வொரு ஆட்சியிலும் ஒவ்வொரு காலகட்டத்திலும் இல்லாமல் பார்த்துக் கொள்கின்ற ஒரு பெரும் பொறுப்பு நமக்கெல்லாம் இருக்கின்றது என்ற அந்த உள் உணர்வோடு இந்தப் பிரச்சினையை அணுகவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

***புராண காலத்திலே, சரித்திரக் காலத்திலே கூட- புத்தகம் எழுதுகின்றவர்கள், புதினம் எழுதுகின்றவர்கள் அந்த நாட்டினுடைய செழுமைகளைப் பற்றி, நேர்மையைப் பற்றி, நலனைப் பற்றி எழுதும்போது - புலியும் மானும் ஒரே குளத்தில், ஒரே துறையில் தண்ணீர் குடிக்கக்கூடிய நாடு என்று எழுதுவார்கள். இன்றைக்குப் புலியும், மானும் ஒரே துறையில் தண்ணீர் குடிக்காவிட்டால் கூட -மானும், மானுமாவது ஒரே துறையில் தண்ணீர் குடிக்கிறதா என்ற கேள்வி எழுப்பக்கூடிய சங்கடமான சூழ்நிலையில் நாம் இருக்கிறோம்!***

அப்படிக் கேட்டுக் கொள்கின்ற நேரத்தில், பத்திரிகைகளுக்கும் இதிலே பெரும் பொறுப்பு இருக்கிறது. சில நேரங்களிலே ஒன்றிரண்டு வதந்திகளின் காரணமாகப் பெரிய சம்பவங்கள் நடைபெற்று விடுகின்றன. குறிப்பாக-தென் பகுதியிலே உள்ள ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் தலைவர் கைது செய்யப்பட்டார், அல்லது தாக்கப்பட்டார் என்ற ஒரு வதந்தி கிளம்பி, அதன் காரணமாக அது உண்மையா என்று அறிந்துகொள்ளக்கூட யாரும் முயற்சி செய்யாமல் ஒரு பெரிய கலவரம் உருவாகி, அது இன்றைக்கு அடங்கிப் போயிற்று.

இதுபோன்ற செய்திகள் வரும்போது அவற்றைத் தீர விசாரித்துப் பத்திரிக்கைகளும் வெளியிடுகிற ஒரு சூழ்நிலை இன்றைக்குத் தமிழ்நாட்டில் இல்லை. எனவே, இத்தகைய வதந்திகளை, தவறான செய்திகளை வைத்துக் கொண்டுகூட, கலவரங்கள் நடைபெறுகின்றன. எல்லாம் தவறான செய்திகள், வதந்திகள் என்று நான் கூறிவிட மாட்டேன். ஒருசில நிகழ்ச்சிகள் இதுபோன்ற மன அதிர்ச்சியைத் தரக்கூடிய வன்முறைகளுக்கு, கலவரங்களுக்குத் தூபமிட்டு விடுகின்றன என்பதை நான் இங்கே சொல்லாமல் இருக்க முடியாது. இவைகளைப் பற்றி எல்லாம் தீர ஆலோசித்து, ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும் என்பதற்காகக் கூட்டப்பட்டுள்ள இந்தக் கூட்டத்தில் உங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாகத் தென் பிராந்தியங்களில், தென் மாவட்டங்களில் நடைபெறுகின்ற இந்தக் கிளர்ச்சியில் எல்லாக் கட்சிகளும் மிகுந்த அனுதாபத்தோடு அணுகி, ஆங்காங்கே சென்று தங்களுடைய கட்சி உறுப்பினர்களை அனுப்பி

விவரங்களை அறிந்துகொண்டு வந்திருக்கிறீர்கள். அவற்றைப் பற்றியும் இங்கே சொல்லலாம்.

ஒன்றை மட்டும் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

இப்போது பொதுவாக நடைபெறுகின்ற இந்தப் போராட்டம், கலவரம் - பெரிய ஜாதி என்று கூட அல்ல, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கும் இடையே நடைபெறுகின்ற ஒரு போராட்டமாக இருக்கின்றது.

புராண காலத்திலே, சரித்திரக் காலத்திலே கூட- புத்தகம் எழுதுகின்றவர்கள், புதினம் எழுதுகின்றவர்கள் அந்த நாட்டினுடைய செழுமைகளைப் பற்றி, நேர்மையைப் பற்றி, நலனைப் பற்றி எழுதும்போது - புலியும் மானும் ஒரே குளத்தில், ஒரே துறையில் தண்ணீர் குடிக்கக்கூடிய நாடு என்று எழுதுவார்கள். இன்றைக்குப் புலியும், மானும் ஒரே துறையில் தண்ணீர் குடிக்கா விட்டால் கூட - மானும், மானுமாவது ஒரே துறையில் தண்ணீர் குடிக்கிறதா என்ற கேள்வி எழுப்பக்கூடிய சங்கடமான சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். ஒரு புறத்திலே அம்பேத்கருடைய சிலை வைக்கப்பட்டால் அதற்குச் சேதம் விளைவிப்பது. இன்னொரு புறத்திலே தேவர் திருமகனுடைய சிலை வைக்கப்பட்டால் அதற்குச் சேதம் விளைவிப்பது என்ற அளவில் இந்தச் சிலை பற்றியும் பெரிய பிரச்சினைகள் எழுந்து இருக்கின்றன. இரண்டு சமுதாயத்தினுடைய தலைவர்களும் அம்பேத்கர் ஆக இருந்தாலும், தேவர் திருமகனார் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவராக இருந்தாலும் அவர்கள் எல்லாம் ஜாதி வெறியைத் தூண்டி விட வேண்டும் என்று எண்ணுகிறவர்கள் அல்ல.

**ஒரு புறத்திலே அம்பேத்கருடைய சிலை வைக்கப்பட்டால் அதற்குச் சேதம் விளைவிப்பது. இன்னொரு புறத்திலே தேவர் திருமகனுடைய சிலை வைக்கப்பட்டால் அதற்குச் சேதம் விளைவிப்பது என்ற அளவில் இந்தச் சிலை பற்றியும் பெரிய பிரச்சினைகள் எழுந்து இருக்கின்றன. இரண்டு சமுதாயத்தினுடைய தலைவர்களும் அம்பேத்கர் ஆக இருந்தாலும், தேவர் திருமகனார் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவராக இருந்தாலும் அவர்கள் எல்லாம் ஜாதி வெறியைத் தூண்டி விட வேண்டும் என்று எண்ணுகிறவர்கள் அல்ல!**

குறிப்பாக - 1957ஆம் ஆண்டு மதுரையில் ஜனநாயக காங்கிரஸ் கட்சியினுடைய பேரணியில் கலந்துகொண்டு தலைமை வகித்துப் பேசிய தேவர் திருமகனார் இவ்வாறு குறிப்பிட்டார்:

''எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அமைதியை இழந்து அராஜகத்தில் இறங்கினால், அது என் இதயத்தைப் பிளந்து ரத்தம் குடிப்பதற்குச் சமம்'' என்று தேவர் திருமகன் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

இதையெல்லாம் மனதில் கொள்ளக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு ஏன் ஏற்படாமல் போயிற்று என்ற கவலை எனக்கு இருக்கின்றது. சிலைப் பிரச்சினைகளால் போக்குவரத்துக் கழகங்களுக்கு, மாவட்டங்களுக்குப் பெயர் வைக்கின்ற பிரச்சினைகளால் உருவாகியிருக்கின்ற இந்தக் கொந்தளிப்புப் பற்றி பலரும் கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார்கள். இந்தப் பெயர்களை மாவட்டங்களுக்கு, போக்குவரத்துக் கழகங்களுக்கு வைப்பதற்குப் பதிலாக ஸ்காலர்ஷிப் போன்ற நல்ல காரியங்களுக்கு இந்தப் பெயர்களைப் பயன்படுத்திச் செய்யலாம் என்ற கருத்தைத் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு.மூப்பனார் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அதைத் தொடர்ந்து பல கட்சித் தலைவர்கள் தங்களுடைய கருத்துக்களை அதை வழிமொழிகிற வண்ணம் தெரிவித்திருக்கிறார்கள்.

ஏராளமான கடிதங்களும், தந்திகளும்கூட அதை வழி மொழிந்து எனக்கு வந்திருக்கின்றன. அவைகளைப் பற்றியும் நீங்கள் உங்களுடைய கருத்துக்களைச் சொல்ல இந்தத் தருணத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று கூறி உங்களுடைய மேலான கருத்துக்களை எதிர்பார்த்து இந்த அளவில் என்னுடைய வரவேற்பு உரையை முடித்துக்கொள்கிறேன்'.

*சென்னை ராஜாஜி மண்டபத்தில் 14.5.1997 அன்று நடைபெற்ற அனைத்துக்கட்சி - சமுதாயத் தலைவர்கள் கூட்டத்தில் ஆற்றிய வரவேற்புரையிலிருந்து.* ★

# பட்டியல் இனத்தவர்களுக்குப் பிளாஸ்டிக் சிறப்புப் பயிற்சி

பிளாஸ்டிக்ஸ் தொழிற்பயிற்சியை முதன்மையாக வைத்து, 1968-ல் சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டு தொடங்கப்பட்டதுதான் "சிப்பெட்" என்றழைக்கப்படும் மத்திய பிளாஸ்டிக்ஸ் மற்றும் தொழில்நுட்ப கல்விப் பயிலகமாகும் (Central Institute of Plastics and Engineering Technology). தென்கிழக்கு ஆசியாவிலே முதன்மையாகத்திகழும் இந்த நிறுவனம் மத்திய அரசின் உரம் மற்றும் வேதியியல் அமைச்சகத்தின் கீழ் இயங்கி வருகிறது. நமது நாட்டில் தொழில்நுட்பப் பயிற்சி தர நிறைய நிறுவனங்கள் இருந்தாலும் பிளாஸ்டிக்ஸ்க்கு எனத் தொழிற்ப்பயிற்சி தரும் நிறுவனம் சிப்பெட் ஒன்று தான். பொதுவாக பயிற்சி, ஆய்வு, வடிவமைத்தல், செயல்முறை, சோதனை எனப் பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டுப் பிளாஸ்டிக்ஸ் தொடர்பான தொழில்நுட்பம் கற்றுத்தரப்படுகிறது. பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்குப் பிளாஸ்டிக்ஸ் மோல்டு குறித்து தொழில் நுட்பத்தில் மூன்றாண்டு பட்டயப்படிப்பு நடத்தப் படுகிறது. இயந்திரவியல் பட்டயப்படிப்பு முடித்தவர்களுக்குப் பிளாஸ்டிக்ஸ் தொழில் நுட்பம், வடிவமைத்தல், இயந்திரம் பராமரிப்பு குறித்து ஓராண்டு முதுகலை பட்டயம் வழங்கப்படுகிறது. இயந்திரவியல் பட்டயப்படிப்பு முடித்தவர்களுக்குப் பிளாஸ்டிக்ஸ் வடிவமைத்தலில் ஓராண்டு பட்டயப் படிப்பு கற்றுத்தரப்படுகிறது. அதுபோல் இயந்திரவியல் பட்டயப்படிப்பு முடித்தவர்களுக்கு பிளாஸ்டிக்ஸ் இயந்திரம் பராமரிப்பில் ஓராண்டு பட்டயப் படிப்பில் பயிற்சி அளிக்கப்படுகிறது. வேதியியல் மற்றும் இயற்பியல் பட்டம் பெற்றவர்களுக்கு மூன்று ஓராண்டு முதுகலை பட்டயப்படிப்புகள் நடத்தப்படுகிறது.

மேற்கூறிய அனைத்து பயிற்சிகளும் நீண்ட நாள் பயிற்சிகளாகும். அதுமட்டுமல்லாது சிப்பெட் பல குறுகிய காலப் பயிற்சிகளையும் நடத்துகிறது. பிளாஸ்டிக்ஸ் தொழில் முனைவோருக்கான பயிற்சிகள், பிளாஸ்டிக்டிக்ஸ் செய்முறைகள், கணிப்பொறியில் ப்ளாஸ்டிக்ஸ் பொருட்கள் வடிவமைத்தல், மற்றும் பிளாஸ்டிக்ஸ் தொடர்பான ஐயங்களைத் தீர்ப்பது எனப் பல பயிற்சிகளை அளிக்கிறது. மேலும் தொழில் சார்ந்தோர்க்குப் பிளாஸ்டிக்ஸ் தொழில்நுட்பம் குறித்து உதவிகள் செய்வது மற்றும் பிளாஸ்டிக்ஸ் தொடர்பான கருத்தரங்குகளை நடத்துவது என சிப்பெட் பிளாஸ்டிக்ஸ் துறையில் நிறைய பங்கேற்கிறது.

| | | |
|---|---|---|
| பயிற்சி நிலையம் | : | 'சிப்பெட்', கிண்டி, சென்னை - 600 032. |
| தகுதியுடையோர் | : | பட்டியல் இன அறிவியல் பட்டதாரிகள் |
| சிறப்புரிமை | : | 30% பெண்கள் |
| காலம் | : | ஆறு மாதம் |
| பயன் | : | (1) ரூ.20,000 கட்டணத்தில் ரூ.15,000 அரசு மானியம் |
| | | (2) பயிற்சி முடித்தவர்க்கு ரூ.2000 முதல் ரூ.4000 வரை, ஊதியத்தில் வேலை வாய்ப்பு |
| | | (3) தொழில் துவங்க நிதியுதவி |

தற்போது முதன்முறையாக சிப்பெட்டானது இந்த கல்வியாண்டில் தமிழ்நாடு அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் பிளாஸ்டிக்ஸ் செயல் முறையில் 60 ஆதி திராவிட பி.எஸ்.சி. பட்டதாரிகளுக்குச் சிறப்புச் சான்றிதழ் வகுப்புப் பயிற்சி ஒன்றினை நடத்த வுள்ளது. அதில் 30 விழுக்காடு அதாவது 18 பேர்கள் பெண்களாக இருப்பார்கள். இந்தப் பயிற்சிக்கான கால அளவு ஆறுமாதமாகும். இந்தப் பயிற்சிக்கான கட்டணம் ரூ.20000 ஆகும். இதில் ரூ.15000 ஆதிதிராவிடர் நலத்துறை ஏற்க முன்வந்துள்ளது. மீதமுள்ள ரூ.5000 - ஐ பயிற்சியில் பங்கேற்கும் மாணவர் பயிற்சிக்கட்டணமாக சிப்பெட்டிற்குச் செலுத்தவேண்டும்.

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிக்கும் அனைவருக்கும் அவரவர் தகுதிக்கேற்ப தனியார் பிளாஸ்டிக்ஸ் தொழிற்சாலைகளில் ரூ.2000 முதல் ரூ.4000 வரை சம்பளம் ஈட்டும் வகையில் பணியில் அமர்த்த சிப்பெட் முயற்சிகளை மேற்கொள்ளும். மேலும் இப்பயிற்சியை முடித்தவர்கள் பிளாஸ்டிக்ஸ் தொழில் தொடங்க முன்வருவார்களேயானால் அவர்களுக்கான ஆலோசனைகள் மற்றும் திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல், நிதி நிறுவனங்களிலிருந்து தொழில்துவங்க கடன் வசதி பெற உதவி செய்வது என அனைத்து உதவிகளையும் சிப்பெட் செய்து தரத் தயாராக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# நல்ல உறவுகளைப் போல்... இதுவும் நாளுக்கு நாள் வலுப்பெறுகிறது.



கற்பனையில் கண்ட இல்லம்
கண்ணெதிரே உருவாகிறது.

கட்டடம் கட்டும்
கைதேர்ந்த சிற்பியின்
கரங்கள் அடுக்கும் செங்கற்கள்.
அவற்றின் இடையே சிறிது சிமெண்ட்
உறுதியான பிணைப்பை உருவாக்க...
அது பாசப் பிணைப்புக்கு இணையானது.

இரண்டுமே நாளுக்கு நாள் வளர்ந்து வலுப்பெறும்.

உள்ளத்தின் உறுதிக்குப் பாசம்.
உங்கள் இல்லத்தின் உறுதிக்கு ராம்கோ.




## ராம்கோ
### சிமெண்ட்

**மதராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட்**

வட்டார விற்பனை அலுவலகம் : ''சென்சுரி சென்டர்'' 2–வது மாடி,
39, டி.டி.கே. சாலை, ஆள்வார்பேட்டை,
சென்னை 600 018.
போன்: 4970710, 4970647.

# சாதி வேறுபாடு இன்னும் தவிர்ந்திலையோ!

யாதும் ஊரே யாவரும் கேளிர்...




பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!

*- கணியன் பூங்குன்றனார், புறநானூறு.*

நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்! அதுதான்
எல்லாரும் உவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியு மா ரதுவே!

*- நரிவெரூ உத் தலையார், புறநானூறு.*



எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நலனே!

*- ஔவையார், புறநானூறு.*

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்!

*- திருக்குறள்.*

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்.

*- திருமூலர்.*

சாதியின் தருமம் இன்னும் தவிர்ந்திலை
போலும் தக்கோய்!

*- கம்பர், கம்ப இராமாயணம்.*



குலம் நினையல் நம்பி!

*- திருத்தக்க தேவர், சீவகசிந்தாமணி.*

சமயவேதம் பலவான சாதிபேதங்கள்
சமயத்தோர்க் கேயல்லாது சற்சாதுக்களுக்கோ!

சாதிப் பிரிவினிலே தீமூட்டுவோம்
சந்தை வெளியினிலே கோல்நாட்டுவோம்!

சாதியாவது ஏதடா? ஆம் திரண்ட நீறல்லாம்
பூதவாசல் ஒன்றலோ? பூதம் ஐந்தும் ஒன்றலோ!

*- சித்தர் பாடல்கள்.*



சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர்; இடாதோர் இழிகுலத்தார்
பட்டாங்கில் உள்ள படி!

*- ஔவையார்.*



பண்டிதரே, மனத்தில் எண்ணிப் பார்த்திரோ?
சொல்லும் பார்க்கலாம்.
தீட்டு எங்கிருந்து பிறந்துவந்தது?
தீண்டாமை பார்க்கிறாய்! நாதம், விந்து,
ரத்தம் எல்லாம் சேர்ந்துதானே இருக்கின்றன?
பாண்டத்துக்குள்ளே தானே பாண்டம் தயாராகிறது.
எட்டுத் தளக் கமலம் பூமிக்கு வந்தது; இந்தத் தீட்டு
எங்கே ஏற்பட்டது?

*- கபீர்*

இறைச்சி தோல் எலும்பினில் இலக்கமிட் டிருக்குமோ

*- சித்தர் பாடல்கள்.*

தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மிருகங்கள்போல் நடத்தப் படுகிற பாட்டாளி, கூலி, ஏழை, மக்கள்தான் எனக்குக் கண்வலியாய் இருப்பவர்கள். அவர்களைச் சமமனிதர்களாய் ஆக்குவதுதான் எனது கண்ணோய்க்குப் பரிகாரம்!

*- தந்தை பெரியார்*



சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!

*- மகாகவி பாரதியார்*



இருட்டறையில் உள்ளதடா உலகம் - சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே!...

*- புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்*

சாதிக் கொடுமைகள் வேண்டாம் - அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்!

*- மகாகவி பாரதியார்*



சாதியின் உணர்வும் தமிழின வாழ்வும்
மோதும் தகையின்; முன்னது வாழின்
என்னரும் தமிழுக்கு எதிர்வரு நாட்களில்
உன்னதப் பெருநிலை உறுதியாய் இல்லை!

*- கவிஞர் குலோத்துங்க சோழன்*



சாதி மதபேதங்கள் மூடவழக்கங்கள்
தாங்கி நடைபெற்றுவரும் சண்டை உலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம்; பின்னர்
ஒழித்திடுவோம்; புதியதோர் உலகம் செய்வோம்!

*- புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்*



இந்த நாட்டிலே சாதிதான் மக்களுக்குள்
பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம்;
பேதமற்ற சமுதாயத்தை - சமத்துவத்தை
தர்மத்தை நாம் நாடவேண்டுமானால்
முதலில் சாதி தொலைந்தாக வேண்டும்!

*- அறிஞர் அண்ணா*

தீண்டாமை என்பது ஏணி மரப்படிபோல், இந்நாட்டு மக்கள் ஒவ்வொருவரையும் பீடித்திருக்கின்றது. தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்று பேசும் இந்தியத் தலைவர்கள் வர்ணாசிரம தருமத்தை ஒழிக்க விரும்புவதில்லை.

*- தந்தை பெரியார்.*

தொகுப்பு : கவிஞர் இன்குலாப்

# ஞானம்

- அகிலன் கண்ணன்

**கா**ற்றில் கலைந்து முன்விழும் முடியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுக் கொள்கிறான் இவன். சாலையின் ஒருபக்கம் கடல்; மறுபக்கம் வாழை, தென்னை, நெடுஞ்சாலைத் தார் ரோடைக் கிழித்துச் செல்லும் பேருந்தில் ஜன்னலோர இடம் தரும் சுகம். கடலைக் கோபித்துக் கொண்டு சடாரென வலப்பக்கம் திரும்பி விட்டது தார்ச்சாலை. கரம் பிடிக்கும் அகல் விளக்கைச் சதங்கையாய்க் கால்களில் கட்டிய பால் கிண்ணங்களுடன் ரப்பர் மரங்கள்.

குளுமையும் இனிமையும் பசுமை யும் மனசுக்குள் வண்ணக் குமிழ் களாய்க் கொப்புளிக்க, இவன் பரவசப்பட்டு ஒவ்வொரு துளி யையும் ரசித்து உள் வாங்குகிறான்.

நகர நாகரிகத்தின் நச்சுக்காற்றால் அதிகம் பாதிப்புக்குள்ளாகாத ஊரின் உட்புகுந்து பெருமூச்சுடன் நிற்கிறது பேருந்து. கையில் சிறு பெட்டியுடன் கீழிறங்கி விலாசம் விசாரித்து நடக்கிறானிவன்.

விரைவும் மலையாள மணமும் தமிழின் உருவம் மாறி, பிடிபட இவன் உன்னிப்பாகக் கவனங் கொள்கிறான்.

பெருமாளின் வீட்டைக் கண்டு பிடிக்க சிரமமிருக்கவில்லை. தெருவின் முதல் வரிசை மட்டும் சற்று பரபரப்பும், ஊரின் தோற்றமும் காட்ட அடுத்த உள் தெருக்கள் பசுமையுடன் தோட்டந்துரவுமாக அமைதியைச் சுவாசிக்கிறது.

கதவுச் சத்தம் கேட்டவுடனேயே பெருமாள் வாசலுக்கு வந்து இவனைக் கட்டிக் கொள்கிறான். பெட்டியை வாங்கி உள்ளே அழைத்துச் செல்கிறான்.

வீட்டின் முன்னே இரு புறமும் முடிச்சு முடிச்சாய் முள் பூத்த பலா மரங்கள்.

''வா! வா! ஒரு மணிக்கரு லேட்டானதால நான் கொஞ்சம் சம்சயப்பட்டேன், எங்கே பயணத்தை 'ட்ராப்' செய்துட்டியோன்னு!"



"அதெப்பிடி! எவ்வளவு நாளா ஆசை அலை மோதக் காத்தி ருக்கேன். குளிச்சிட்டுக் கொளம் பீடலாம்ல? சீனிவாசன் சாரை மொத மொதலாப் பாக்கப் போறேன். அவரோட முத நாவலைத் தேடிப் பிடிச்சுப் படிச்சேன். சமீபத்தில் அவர் எழுதின 'அண்டவெளி' நாவலுக்கும் முதல் நாவலுக்கும்தான் எத்தனை வித்தியாசம்! எவ்வளவு பெரிய வீச்சு!"

"அவர் எழுதினதே ரெண்டு நாவல்தானே? இங்க பாரு, இப்பிடியே சீனிவாசனை சிலாகிச்சு நின்னா 'லேட்'டாயிடும். மொதல்ல குளிச்சு, டிபன் சாப்பிடு".

"பெருமாள்! சீனிவாசன் என் ஸ்கிரிப்ட்டைப் படிச்சுட்டாரா? என்ன சொன்னார்? மனசு கெடந்து அடிச்சுக்குது. நாலஞ்சு வருஷமாத் தான் எழுத ஆரம்பிச்சிருக்கிற என்னோட மொத நாவலை அவர் படிக்கணும்னு ஆசைப்பட்டு..."

"ஐயோ, போறும் நிறுத்துப்பா. உன் நாவலை அவரிடம் குடுத்து ஒரு மாசமாச்சு. போன வாரம் போனப்ப கேட்டுட்டேன். நீர் இங்க வந்து அவரைப் பார்க்க விரும்பறீர்ன்னு சொல்லிட்டேன். 'வரட்டும்'ன்னு சீனிவாசன் சொன்ன பிறகுதான் உமக்கு எழுதினேன். நீர் வந்துருக்கீர். இன்னும் கொஞ்ச நேரத்தில அவரைப் போய்ப் பாக்கப் போறோம்".

"ஓ! பெருமாள். நீ மட்டும் இல்லாட்டி...."

"இதானே வேணாங்கறது; நாந்தானிருக் கேனே கல்லாட்டம். பெறகென்ன? உப்புப் பெறாத விஷயத்துக்கெல்லாம் இப்பிடி உணர்ச்சிவசப்பட்டே உன் வாழ்க்கையைப் பொங்க விட்டுடாதப்பா!"

பெருமாள் தன் மனைவிக்கு இவனை அறிமுகம் செய்விக்கிறான். பழமைய ஹிந்தி சினிமாவில் வரும் பித்தளை டம்பளரின் உயரத்தில் எவர்சில்வர் டம்பளர் - டபராவில் காப்பி.

இவன் ருசித்துப் பருகியபின் குளிக்கச் செல்கிறான்.

குழாய்ப் புட்டு, இடியாப்பம், செவ்வாழை என அமர்க்களமாய் காலைப் பலகாரம் முடிகிறது.

''கெளம்பலாமா பெருமாள்?"

"இரப்பா. இப்பத்தானே ஒம்பதாகுது. கொஞ்சம்

போட்டும். காலங் கார்த்தால கதை பேசப் போக் கூடாது."

"அப்புறம்? நான் எப்பிடியும் சாயங்காலமே மெட்ராஸ் கெளம் பணுமே?"

"பொறு, பொறு. சீனிவாசன் கறாரான வியாபாரி. பல வருஷமாப் பாத்திரக் கடை நடத்துறாரு. இந்த ஊர் வீட்லருக்க சாமான்கள்லாம் இவர் கடை சாமான்ங்கதான். மொதல்ல ஒரு பாத்திரக்கடை. பெறகு எலக்ட்ரிகல். அதன்பெறகு எலக்ட்ரானிக்ஸ்ன்னு இப்பம் ஐஞ்சு கடை மொதலாளியாக்கும் அவர்! காலை பத்து மணிக்கு வந்து கல்லால உக்காந்தார்னா மதியம் 'லஞ்சு'க்கு ஒரு மணிக்கு வீட்டுக்குத் திரும்புவார். சாப்பாடு - சுகமான நித்திரை. நாலு மணிக்கு வந்தார்னா ராத்திரி எட்டோ, ஒன்பதோ ஆகும் வீடு திரும்ப."

"எப்ப எழுதுவாரு?"

"இந்த பாரு, இப்பம் என்கிட்டக் கேட்டமாதிரி அவர்ட்ட இந்த அரிச்சுவடிக் கேள்வில்லாம் டி.வி. பேட்டி மாதிரிக் கேட்டுடாத. அவர் எழுதுவார்; எழுதாமலு மிருப்பார்."

"அது சரி. இனிப் புதுசாத் தான் எழுதணும்னு இல்லையே. அவர் எழுதின ரெண்டு நாவல், அம்பது சிறுகதை, நாலு குறுநாவல், கொஞ்சம் கவிதை இதைப் படிச்சாவே போதுமே!"

"என்ன, எண்ணிக்கையா, தரமா? எதை எதிர்பார்க்கிற?"

"ஐயோ! நான் கொறையாச் சொல்லலை. வாத்தியார்ன்னாவே இந்தப் பட்டிமன்ற புத்தி வந்துடுது பார்!"

"ம்... உன்னைப் பெறகு பேசிக்குறேன். கொஞ்சம் ரெஸ்ட் எடு. நான் பக்கத்துல காலேஜ் போய் கையெழுத்துப் போட்டுட்டு வந் துடறேன். அப்புறம் சீனிவாசன் சார் கடைக்குப் போயிடலாம். அப்பம் நா வரேன்!" என்று கூறிப் பெருமாள் கைநிறையப் பத்திரிகை, செய்தித் தாள்களை கொணர்ந்து தருகிறான்.

சிவப்புச் சாந்து பூசிய தரையில் கால் குளுமை உணர பக்கத்து மரம் செடிகள் காற்று முகத்தில் வருட பிரம்பு நாற்காலியில் சரிகிறான் இவன்.

★★★

நெளிவு சுளிவுகளுடன் கூடிய அழகிய தேக்குமர மேஜையெதிரே சுழல் நாற்காலியில் சீனிவாசன். கதர்ச் சட்டை. கறுப்பு ப்ரேம் போட்ட கண்ணாடி. செவ்வக முகம். வெள்ளிக் கம்பிகளாய் தலைமுடி. அறுபது வயதிருக்கலாம்.

'ரசவாதம் செய்த எழுத்துக்குச் சொந்தக்காரர் இவர்தானா?"

இவனுள் விஸ்வரூபமெடுக்கிறார் சீனிவாசன்.

சிரித்துப் பேசியபடியே தொலை பேசித் தொடர்பைத் துண்டிக்கிறார்.



"வாங்கோ பெருமாள்!"

உட்கார்ந்தபடியே எதிர் இருக் கையைச் சுட்டிக் கை நீட்டுகிறார்.

பெருமாள் இவனை அவருக்கு அறிமுகம் செய்கிறான். இவனைப் பற்றி, இவன் எழுத்தைப் பற்றி, இவனது ரசனை பற்றிப் பிரஸ் தாபிக்கிறான்.

"ஓ!"

"நான் உங்க வாசகன். உங்க எழுத்து எல்லாத்தையும் தேடிப் படிச்சிருக்கேன்". இவன் சீனிவா சனிடம் மெதுவாகப்பேசுகிறான்.

"நல்லது எதுவுமே தேடத்தான் கிடைக்கும்"

"உங்க ஆரம்ப கால சில சிறுகதைகளை நீங்க இப்ப "டிஸ் ஓன்" பண்றேன்னு சொல்றீங்களே, நியாயமா இது?"

"என்ன தப்பு? எழுதின எனக்கு அதைத் திரும்பப் பெற உரிமை யில்லையா? சுயமா உள் தேடல்

நடைபெறும் போது ஆத்மா அண்ட வெளியில் நர்த்தனம் செய்ற அனுபவத்தை நாமும் பெறணும். அப்பத்தான் அது நெஜமான எழுத்து".

"அஜானுபாகுவான இவர் எழுந்து ஆடினால்?" இவன் சிலிர்த்துக் கொண்டு நடப்புலகுக்குத் திரும்பு கிறான்.

மேஜையின் கீழிருந்த அழைப்பு மணியை சீனிவாசன் அழுத்தியதும் ஓடிவருகிறார் நாற்பது வயதுக்காரர்.

"ஐயா கூப்பிட்டீங்களா?"

"கந்தசாமி! ஸ்பெஷல் டீ வாங்கிட்டு வா".

இவனும் பெருமாளும் வேண்டாம் எனக் கூறியதை லட்சியம் செய்ய வில்லை சீனிவாசன்.

"பெருமாள், அப்புறம்? உங்க காலேஜ் பிரின்ஸி பல் போஸ்ட் பிரச்னை என்ன முடிவாச்சு?"

பெருமாள் பொறுமையாகப் பதில் சொல் கிறான்.

இவன் பெரு மாளைப் பார்க்கிறான்.

பெருமாள் சீனிவாசனிடம் கேட்கிறான்.

"இவரோட நாவல் ஸ்கிரிப்ட் தந்திருந்தேனே? படிச்சுட்டீங்களா?"

"ஆமா, மெட்ராஸ்ல பறக்கும் ரயில் எந்த நிலைல இருக்கு?"

பெருமாளின் கேள்வியைக் காதில் விழுந்த தாகவே காட்டிக் கொள்ளாமல் இவனிடம் கேட்கிறார்.

சிந்தாதிரிப்பேட்டையில் பறக்கும் ரெயில் நிற்கும் கதையில் ஆரம்பித்து விரைவில் லஸ்வரை வந்துவிடும் என்று விவரிக்கிறான் இவன்.

கூறிமுடித்து ஆவலுடன் சீனிவாசனின் முகத்தைப் பார்க்கிறான்.

கந்தசாமி பவ்யமாகத் தேத் தண்ணீரைக் கொணர்ந்து தருகிறார்.

சீனிவாசன் எடுத்துப் பருகுகிறார். சைகை காட்டி இவர்களைப் பருகச் சொல்கிறார்.



டீயைக் குடித்தபடியே இவன் பெருமாளைப் பார்க்க, பெருமாள் புருவத்தாலும் கண்களாலும் பதில் சொல்கிறான்; "பொறுமையாயிரு".

"இவர் உங்களைப் பார்க்கணும்னே மெட்ராஸ்லேர்ந்து நேரா கௌம்பி வந்துருக்கார். நீங்க அவரோட நாவலைப் பத்தி உங்க அபிப்ராயம் சொன்னா"...

"பெருமாள்! உங்க காலேஜீக்கு இந்த வருஷம் யூ.சி.ஜி. கிராண்ட் எதுவும் வந்துதோ?" பதில் சொல்கிறார் பெருமாள்; "வழக்கம் போல சயின்ஸ், மேக்த்ஸ், கம்யூட்டர் சயின்ஸ், இங்கிலீஷ், ஹிஸ்ட்ரி டிபார்ட்மெண்டுங்க தான் பெரும் பகுதியை எடுத்துக்கிட்டாங்க. தமிழுக்குக் கடைசிலதான்..."

இவன் பொறுமை இழந்து பெருமாளை வேதனையுடன் பார்க் கிறான்.

கந்தசாமி காலி யான டீ டம்ளர் களை எடுத்துச் செல்கிறார்.

"கந்தசாமி! பெருமாள் சார் தந்த ஸ்கிரிப்ட்டை அன்னைக்கு பீரோவில் வைக்கச் சொல்லித் தந்தனே, அதைக் கொண்டா!"

இவன் ஆர்வத்துடன் கந்த சாமியின் பின்னே பார்வையைப் பாயவிடுகிறான். அவர் சீனிவாசன் முன் கையெழுத்துப் பிரதியைக் கொணர்ந்து வைக்கிறார்.

பளபளக்கும் மேஜைமேல் வெளிர்ப் பச்சைக் காகித உறையில் இவனது நாவல்.

திரைச்சீலை விலகித் தரிசனம் காணத் தவிக்கும் பக்தனாய்ப் படபடக்கும் நெஞ்சோடு இவன் சீனிவாசனின் முகத்தையே கண்ணிமைக்காது பார்த்துத் தவிக்கிறான்.

சீனிவாசன் வலக்கரத்தால் அந்த உறையை இவனை நோக்கி நகர்த்து கிறார்.

பெருமாள் அதை எடுத்து வைத்துக் கொள்கிறான். இவன் பெருமாளைப் பார்க்கிறான். இவனது பார்வையைத் தவிர்த்திட சீனி வாசனை நோக்குகிறான் பெருமாள். சீனிவாசன் இவனை விசாரிக்கிறார்.

"என்னைக்குக் கௌம்புறீங்க?"

இவன் எதிர்பார்க்கவில்லை இக் கேள்வியை.

"இன்னிக்கே."

"உங்க சொந்த ஊரெது?"

பதில் சொல்கிறான்.

"அப்பா, அம்மா?"

இதற்கும் பதில் கூறுகிறானிவன்.

இவனது ஆசைப்பட்டம் நூலறுந்து தாழ்கிறது.

"நீங்க ஆபீசுக்கு எப்படிப் போவீங்க?"

"கார்லதான்."

இவன் பதில் சொல்லியபடியே பெருமாளைப் பார்க்க, பெருமாள் தோளைக் குலுக்குகிறான்.

"வர்றேன் சார்?"

இவன் நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளியபடியே எழுந்து வெளியேறுகிறான்.

ஓட்டமும் நடையுமாய் கையில் பச்சை உறையுடன் இவனைப் பின் தொடர்கிறான் பெருமாள். அருகே வந்து இவனின் தோள் தொட்டு "என்ன இப்புடிப் பண்ணிட்டாரு இந்த ஆளு? படிச்சேன். நல்லாருக்கு; நல்லால்ல..."

"பெருமாள்! மனசெல்லாம் வேதனையாயிருக்கு. நீயெல்லாம் ஏண்டா எழுத வந்தேன்னு நேர்டியாக் கேட்ருக்கலாமே?"

"வருத்தப்படாதே..."

"ஹூம்...இப்பிடியும் ஒரு மனுஷரா?"

"சார்! சார்!"

குரல் கேட்டுத் திரும்பிப் பார்க் கிறான். வேட்டி கட்டிய மனிதர் ஓடி வருகிறார். மூச்சு வாங்க, பேச முடியாமல் இவனது கரம் பற்றிப் பேசுகிறார்.

"சார், நான் உங்க கதையெல்லாம் அப்பப்ப பத்திரிகைல படிச்சி ருக்கேன், சார்! நான் படிச்சு ரசிச்சு, வீட்லருக்கவுங்களையும் படிக்கச் சொல்லிருக்கேன். உங்க எழுத்து ரொம்ப உணர்வு பூர்வமாயிருக்கு. இன்னிக்கு உங்களை நேர்ல பாக்க முடிஞ்சதில எனக்கு ரொம்ப சந்தோஷம்."

இவனுக்கு மூச்சு முட்டியது.

"யாரிவர்?"



"அட, சீனிவாசன் கடையில டீ கொணாந்து தந்த கந்தசாமி!"

இவன் கந்தசாமியின் கரம் பற்றித் தோளை இறுகத் தழுவுகிறான்.

"சார், இந்த நாவல் பத்திரிகையில எதும் வரப் போகுதா?"

"ஹூம், இதெல்லாம் பத்திரிகைல வராது. ஒருவேளை புத்தகமாவா?"

"அப்ப, புத்தகம் வந்ததும் எனக்கு ஒரு பிரதி வீ.பீ.பீ.ல அனுப்பிவையுங்க சார். படிச்சுப் பாக்கணும். தான் படிச்சு முடிச்ச உடன் மொதலாளி என்கிட்ட குடுத்துத்தான் உள்ள வைக்கச் சொன்னாரு. ஆனா, நான் படிக்கக் கெடைக்கலை இந்த நாவல்".

இவன் பெருமாளைப் பார்க் கிறான்.

முகத்தில் ரோஜாப்பூ.

இவன் கந்தசாமியின் கரத்தில் பச்சைக் கவரைத் திணிக்கிறான்.

"கந்தசாமி, நீங்க படிங்க. படிச்சிட்டு எதுவும் எழுதணும்னு தோணினா எழுதிக் குடுங்க. அதுதான் இந்த நாவலுக்கு முன்னுரை",

பொட்டல் வெளியில் தாழப் பறந்த பட்டம் 'சர் சர்'ரென மேல் எழும்பி சீறிப் பாய்ந்து வானைப் பிளந்து உயரே உயரே பறக்கிறது.





# நன்மைகள் கோடியடா!

கவிஞர் தஞ்சை. பாண்டியன்

கோடை விடுமுறை விட்டாச்சு-தம்பி
கொடிய வெப்பம் வந்தாச்சு!
பாடும் வண்டாய்த் திரியாமல்-வீட்டில்
பணிவாய் அடங்கி இருந்திடடா!

மாலை முழுதும் விளையாடு-உன்
மனமும் மகிழப் பலரோடு!
பாலைப் போன்ற மனமோடு-நீ
பண்புடன் வந்தால் துயரேது?

ஊரை எங்கும் சுற்றாமல்-அறிவை
ஊட்டும் நூல்கள் கற்றிடடா!
பேரைப் புகழை இழக்காமல்-நீ
பெரியோன் ஆனால் நன்மையடா!

நாளைக் குடிமகன் உன்னாலே-நம்
நாடே செழித்திட வேண்டுமடா!
வேளை தோறும் கடமைகளை-நீ
விரும்பிச் செய்திட வேண்டுமடா!

சோம்பல் உள்ளவன் உயர்வானா? - நீ
சுறுசுறுப் பாகச் செயல்படுவாய்!
தாம்வரும் வழியில் வெற்றிகளை - நீ
தந்திட நித்தம் முயன்றிடுவாய்!

காலம் பொன்னைப் போன்றதடா-நம்
கடமை கண்ணைப் போன்றதடா!
நாளும் இதனை உணர்ந்திட்டால்-வரும்
நன்மைகள் வாழ்வில் கோடியடா!







# பிணிதீர்க்கும் திருநீற்றுப் பச்சிலை

- டாக்டர் ஏ.ஆர்.என்.துரைராஜ்

இந்தத் திருநீற்றுப் பச்சை இலை என்பது, துளசியின் கதிர்களைப் போலவே பெரிய அளவில் கதிர்களாகக் காட்சி அளிக்கும். ஆனால், துளசி இலைக்கும் இதற்கும் நறுமணம் இருப்பினும் இதற்கு நெடிசல் வரும் குணமுண்டு. இலையைக் கிள்ளி நுகர்ந்தால் கார மணமும், ஒரு வித நெடிசலும் விறுவிறுப்பான வாசனையும் வீசும்.

கதிர் முதிர்ந்தால் எள் விதைபோல, உருண்டையானதும் கருமைநிறமுமான விதை உதிரும். இவ்விதையை நாட்டு மருந்துக் கடைகளில் விற்பனை செய்வதுண்டு.

தமிழ்நாட்டுக்கே உரிய மூலிகை என்றாலும், இது பாரசீகம், ஆப்கானிஸ்தான் ஆகிய இடங்களிலும் பயிராக்கப்படுகிறது.

**தீரும் நோய்**

சிறுநீர் பெருக்கு, வெப்பம் தணிக்க, வாதநோய், கபநோய், காது - மூக்கு - தொண்டைகளில் காணும் நோய்களுக்கெல்லாம் சிறந்த நிவாரணியாகும். மற்றும் நுரையீரல், சளி, காசம், சீதள ஜுரம், இழுப்பு, கபவாந்தி, ரத்தவாந்தி, வெட்டை சூடு, கண்களில் காணும் கட்டி, மருவு, பருவு, காது வலி, வீக்கம், மண்டை பீனிச நோய், கணுக்களில் ஏற்படும் வலி - அதாவது, முழங்கால்வலி, முதுகுவலி, கீழ்வாய்வு மற்றும் பல.

**பயன்படுத்தும் முறை**

**நுரையீரல் சளி காசநோய்களுக்கு :**

திருநீற்றுப் பச்சை இலையின் சாறு 10 துளி, தூதுவளை இலையின் சாறு 10 துளி இவைகளை ஒன்று கலந்து ஒரு கஸ்தூரி மாத்திரையைத் தேனில் இழைத்து, அச் சாற்றில் கலந்து கலக்கி வைத்துக்கொண்டு, காய்ச்சிய பசும்பால் 100 மிலி அதில் கொஞ்சம் கற்கண்டுகள் சேர்த்து, அச்சாற்றில் கலந்து ஒரு வேளை மட்டும் அருந்திவரும் பட்சம், நாளடைவில் நுரையீரல் சளி காசநோய் அனைத்தும் நீங்கிவிடும்.

**காது - மூக்கு - தொண்டை நோய்களுக்கு :**

திருநீற்றுப் பச்சை இலை 100 கிராம், கற்பூர வள்ளி இலை 100 கிராம், சுக்கு 15 கிராம், மிளகு 15 கிராம், திப்பிலி 15 கிராம் - இவைகள் அனைத்தையும் அம்மியில் வைத்து நன்கு மை போல் அரைக்கவேண்டும். மெழுகுபோல் ஆனதும் அதனைச் சிறிய கண்டைக்காய் அளவு உருண்டையாக உருட்டி நிழலில் உலர்த்தி, நன்கு காய்ந்த பிறகு ஒரு புட்டியில் சேமித்து வைத்துக்கொள்ளவும். தினமும் காலை, மாலை ஒரு மாத்திரை வீதம் வாயிலிட்டு, காய்ச்சிய பசும்பால் கொடுத்து வரவும். சிறுவர்களுக்கும் கொடுக்கலாம்.

குறிப்பு - தொண்டையில் சதை வளர்தல், மூக்கில் சதை வளர்தல், டான்சில் ஆபரேஷனே இன்றி 40 நாட்களில் நீங்கும்.

**சீதள ஜுரம், கபத்தால் வரும்**

**சளிஜுரம், சளி ஜுரத்தால் வரும்**

**இழுப்பு, கபவாந்தி, ரத்தவாந்தி இவைகளுக்கு:**

தேவையான திருநீற்றுப் பச்சை இலை, கதிர் வேர் காம்பு இவை அனைத்தையும், சிறிய மண்பாண்டத்தில் போட்டு ஒரு துண்டு சுக்கு 10 மிளகு அம்மியில் வைத்து நசுக்கி, இரண்டு சிட்டிகை சீரகம் எடுத்து



இவைகளைத் தட்டிப் போட்டு, ஒரு லிட்டர் தண்ணீர்விட்டு நன்கு கொதிக்கச் செய்து 12 லிட்டர் ஆகச் சுண்டிய பிறகு எடுத்து வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

**பயன்முறை**

பெரியவர்கட்கு 100 மிலி.

சிறியவர்கட்கு 50 மிலி.

குழந்தைகட்கு ஒரு சங்கு அளவும், காலை-மாலை கொடுத்து வர, நீங்காத சீதள ஜுரம் நீங்கும்.

**கண்களில் காணும் கட்டிக்கு :**

திருநீற்றுப் பச்சை இலையைக் கொஞ்சம் எடுத்துக் கசக்கினால் சாறுவரும். அந்தச் சாற்றை எடுத்து அடிக்கடி கண் கட்டியின்மேல் தடவிவரும் பட்சம், கட்டி அமுங்கும். அல்லது, பருத்து, பழுத்து உடையும். உடைந்த பிறகு இந்தச் சாற்றையே போட்டு வர ரணம் ஆறி நலம் ஆகும்.

**வெட்டைச்சூடு நீங்க :**

தேவையான இலையைக் கொண்டு வந்து சுத்தம் பார்த்து, அம்மியில் வைத்து இடித்து கசக்கிப்பிழிந்து, சுமார் இரண்டு அவுன்ஸ் சாறெடுத்து, 200 மிலி பசும்பாலில் கலந்து காலையில் மட்டும் ஒரு வாரம் அருந்திவரும் பட்சம் மேற்கண்ட வெட்டைச் சூடு தணியும்.

**முகத்தில் காணும் மருவு நீங்க :**

1.தேவையான இதன் சாற்றுடன் வசம்பு சேர்த்து அரைத்து முகத்தில் தோன்றும் மருவுக்கு லேசாகப் போடவும்; நாளடைவில் நீங்கிக் கரையும்.

2.ஆரம்பத்தில் காணும் மருவுக்கு, தோல் உரித்த வெள்ளைப் பூண்டு ஒரு பல், ஒரு பொட்டு சுண்ணாம்பு இவைகள் மூலம், முதலில் அந்த மருவுமேல், சுண்ணாம்பு வைத்து, பூண்டினால் லேசாகத் தேய்க்க மருவு தோல் விலகி இரத்தம் வரும், துணி கொண்டு துடைக்கவும். எளிதில் நீங்கும். பயம் வேண்டாம்.

**விக்கமுற்ற கால்களுக்கும், குடல் வாதம் உள்ளவர்களுக்கும் சிறந்த எளிய முறை :**

திருநீற்றுப் பச்சை இலை தேவையானதை எடுத்து சுத்தம் பார்த்து, ஓர் மண் பாண்டத்தில் இட்டு, அத்துடன் தகுந்த தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்துக் காய்ச்சி எடுத்து, வடிகட்டி, வடிகட்டியதை, எடுத்து 20 முதல் 30 மில்லி வரை அருந்த நாளடைவில் குடல் வாதம் நீங்கி, மற்றும் வீக்கம் தணிந்து குணமாகும்.

**காதுவலி:**

இந்த இலைச் சாற்றுடன் சம அளவு நல்லெண்ணைய் சேர்த்துக் காய்ச்சி, சாறு சுண்டிய பிறகு எடுத்து புட்டியில் சேமித்து வைத்துக்கொண்டு, தேவையானபோது எடுத்து வலியுள்ள காதுகளில் இரண்டு துளி விட்டு, பஞ்சு அடைக்க நாளடைவில் வலி நீங்கும்.

**மண்டை பீனிச நோய்களுக்கு - நஸ்யம் :**

இந்த இலைச் சாற்றில் மிளகு தேவையானதைப்



போட்டு ஊறவைத்து உலர்த்தி, உலர்த்தியதை - அதாவது காய்ந்ததை எடுத்துத் தூள் செய்து வைத்துக்கொள்க.

வேண்டும்போது இத்தூளை எடுத்துப் பொடி போடுவது போல் செய்தால் ஓயாது நீர் ஒழுகும். மூக்கில் சளி ஒழுகும். பீனிச நோய்களில் தும்மல் இருமல் யாவும் நீங்கும். பெரியோர்கள் இதே தூளைக் காலை வேளையில் தேனில் குழைத்துச் சாப்பிட்டு வரலாம்.

**வாந்தி நிற்க :**

திருநீற்றுப் பச்சை இலையின் சாறெடுத்து, வெந்நீரில் கலந்து அருந்த, சகலவிதமான வாந்தியும் நிற்கும்.

**முகத்தில் காணும் பருவு நீங்க :**

பருவத்தில், முகத்தில் காணப்படும் பருவைத் தெரிந்தோ, தெரியாமலோ நகத்தால் கிள்ளி விடுவதுண்டு. அது கடைசியில் புரையோடு சீழ்வைத்து சில சமயங்களில் உயிருக்கே ஆபத்து விளைவிக்கக் கூடும் மற்றும் முகம் வீங்கிக் காணப்படும். எனவே, இத்தகைய விஷப் பருக்கள் தோன்றினால், உடனே திருநீற்றுப் பச்சை இலையைக் கசக்கிச் சாறெடுத்து, அந்தச் சாற்றோடு வசம்பு வைத்து நன்கு அரைத்து, அப்பருக்கள் மீது சுமார் 3 அல்லது 6 வேளை தடவிவரும் பட்சம் பருவு காய்ந்து கொட்டிவிடும்.

குறிப்பு: பருவு வேறு, மருவு வேறு என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

**அறிவு வளர :**

திருநீற்றுப் பச்சிலையைக் கைப்பிடி எடுத்து சுத்தம் பார்த்து அம்மியில் வைத்து அதன் மேல் பசும்பால் ஊற்றி அரைத்து, அரைத்ததை எடுத்து மீண்டும் 200 மிலி பசும்பாலில் கலந்து கலக்கி அருந்திவரும் பட்சம், நாளடைவில் அறிவு விருத்தியாகும்; மற்றும் கப வாந்தியை நீக்கும் சக்தி படைப்பவை.

**விதை :**

திருநீற்றுப் பச்சை விதைக்குத்தான் சப்ஜா விதை என்பார்கள். கோடையில் சர்பத் அருந்தும்பொழுது இந்த சப்ஜா விதையைப் போடுவார்கள். விற்பனை செய்யும் கடைக்காரர், ஏற்கெனவே சப்ஜா விதையை வேண்டிய அளவில் எடுத்துத் தண்ணீரில் போட்டு வைப்பார். சிறிது நேரத்தில் உப்பி வெள்ளையாகவும், குழகுழப்பாகவும் நீரில் மிதக்கும். குளிர்ச்சியான பாணங்களுக்கு இந்த சப்ஜா விதையைத் துணையாகச் சேர்ப்பதுண்டு.

கணுக்களில் ஏற்படும் வலி, முழங்கால் வலி, முதுகுவலி, கீழ் வாய்வு அனைத்தும் நீங்க தைலம் செய்முறை:

தேவையானதும் அதிகமாகவும் உத்தேசமாகத் திருநீற்றுப் பச்சிலைகளைக் கொண்டுவந்து சுத்தம் பார்த்து உரலில் போட்டு, சிறிது தண்ணீர் ஊற்றி இடித்து, எடுத்து, பிழிந்த சாறு சுமார் 2 லிட்டர் எடுத்துக் கொள்ளவும்.

பின், சுத்தமான நல்லெண்ணெய் 1¼ கிலோ, பசுவின் பால் 1½ லிட்டர் - இந்த மூன்று சரக்குகளையும் ஒரு மண்பாண்டத்தில் இட்டு, அடுப்பில் வைத்துக் காய்ச்சி இறக்கி வடிகட்டிச் சேமித்து வைத்துக்கொண்டு, நோய் தீரும் வரை கொடுத்தால் ரொம்பவும் நல்லது.

உபயோக முறை அளவு 5 முதல் 10 கிராம் எடுத்து, காலை மாலை இருவேளை உபயோகிக்கலாம்.

குறிப்பு : இத் தைலத்தை 5 கிராம் முதல் 10 கிராம் வரை உள்ளுக்கு அருந்தலாம். மற்றும் இத் தைலத்தை எடுத்து முழங்கால், முதுகு போன்ற இடங்களில் மேல் பூச்சிற்கும் தடவலாம்.

இத் தைலம் காலை மாலை அருந்தும்போது 10 நிமிடம் கழித்து, சீரகக் குடிநீர் சுமார் 10 கிராம் எடுத்து துணை மருந்துடன் அருந்தவேண்டும்.

பத்தியம்-புளி நீக்கி உணவு உட்கொள்ளவேண்டும்.


படிக்க...பயன்பெற...பாதுகாக்க

தமிழரசு

சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)

ஆண்டு சந்தா ... ரூ.72

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)

ஆண்டு சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்,
சென்னை - 600 002

# உன் விருப்பமாவது



அமைதியின்றி அலைகிறேன்
வந்துவிடேன் காதலே;
பறிக்கப்பட்ட ஆற்றல்
காத்திருத்தலோடு கரைகிறது!

புவியை ஸ்வர்க்கமாக்கும்
வியாபாரம் விட்டுவிட்டு
போதையில் புத்திவரும்
வாழ்வின் சூட்சுமம் பற்றி



உன் அணிவகுப்பினின்றும்
விடை தந்துவிடாதே!

இறுக்கி வைத்திருக்கிறேன்
கட்டுப்பாடுள்ள அழுகைகளை!

மனத்திரையில் காணும்
கணநேரக் காட்சிகள்
பூக்களின் அழகுத் துள்ளலாய்
அவ்வப்போது வந்துபோகும்!

உனது விருப்பமாவது
என் சிரச்சேதமெனில்
நான் திருப்தியுறுவேன்
அந்த உறுதிமொழிக்கு!



ஆங்கில மூலம் : **எம்.ஏ.கான் காலிஃப்**
தமிழில் : திருவாரூர் **ஜெயகிருஷ்ணன்**

வேளாண்மை

# நூற்புழுக் கட்டுப்பாடு

தாவர நூற்புழுக்கள் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிரிகள். இவை தாவர வேர்களில் இருந்து சாற்றை உறிஞ்சி உண்டு வாழ்கின்றன. தமிழ்நாட்டில் இந்த நூற்புழுக்களால் ஏற்படும் இழப்பு ஒரு ஆண்டுக்கு 2 கோடி ரூபாயாகும். கார்போயூரான் மற்றும் போரேட் போன்ற நூற்புழுக்கொல்லி மருந்துகள் இருந்தாலும் இவற்றை வாங்கி உபயோகிப்பது அதிகமாகச் செலவாவதுடன் முறையாகக் கையாளப் படவில்லை எனில், ஆபத்தை ஏற்படுத்துவதாகவும் உள்ளன. இந்த நிலைமையில் ஒருங்கிணைந்த நூற்புழுக் கட்டுப்பாடு மிகவும் முக்கியமானதாகிறது.

அங்ககப் பொருட்கள் மக்கும்போது வெளியாகும் அமிலங்கள் நூற்புழுக்களுக்கு நச்சுக்களாகச் செயல்படுவதுடன், மண்ணின் சூழ்நிலையில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இதனால் நூற்புழு எதிரி நுண்ணுயிர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. இவை நூற்புழு ஒட்டுண்ணிகளாகவும் நூற்புழுக்களைப் பிடித்து அழிக்கும் தன்மை உடையனவாகவும் இருப்பதால், மண்ணில் நூற்புழுக்களின் எண்ணிக்கை குறைக்கப்படுகின்றது.

## பூஞ்சாள அளவு

மண்ணில் இடும் பிண்ணாக்குகள் மக்கும்போது வெளியாகும் வேதிப்பொருட்கள், ஒய்வுநிலையில் உள்ள பூஞ்சான வித்துக்களைத் தூண்டி அவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்கின்றன. மண்ணில் பசுந்தாள் உரமிடும்போது, பயிர்களைத் தாக்காத மற்ற நூற்புழுக்களின் எண்ணிக்கையை அதிகரித்து, இதனால் நூற்புழுக்களைப் பிடித்து அழிக்கும் பூஞ்சான அளவை அதிகரிக்கச் செய்கின்றது.

நூற்புழுக்களைப் பிடித்து அழிக்கும் பூஞ்சைகளான ஆர்த்ரோபோட்ரிஸ், டேக்டைலெல்லா நூற்புழு முட்டை ஒட்டுண்ணிகளான பேசில்லோமைசஸ் லில்வாசினஸ், வெர்டிசிலியம் கிளாமிடோஸ்போரியம், கிளையோகிலேடியம் ரோசியம், பியூசேரியம் ஆக்ஸிஸ்போரம் மற்றும் சிலின்ரோ கார்பான் டெஸ்ட்ரக்டன்ஸ் ஆகியவற்றின் செயல்பாடு இந்த அங்ககப் பொருட்கள் மட்கும்போது அதிகரிக்கின்றது.

1. தாவர நூற்புழுக்கள் : வேர் முடிச்சு மற்றும் மொச்சை வடிவ நூற்புழுக்கள்.

   அங்ககப் பொருட்கள் : எக்டருக்கு 1 டன் வேப்பம் பிண்ணாக்கு இடுதல்.

   பயிர் : காய்கறிகள்.

2. தாவர நூற்புழுக்கள் : மொச்சை வடிவ மற்றும் வேரழுகல் நூற்புழுக்கள்.

   அங்ககப் பொருட்கள் : தொழு உரம் எக்டருக்கு 25 டன் இடுதல்.

   பயிர் : பருத்தி.

3. தாவர நூற்புழுக்கள் : வேர்முடிச்சு மற்றும் முட்டைக்கூடு நூற்புழுக்கள்.

   அங்ககப் பொருட்கள் : எக்டருக்கு 1 டன் வேப்பம் பிண்ணாக்கு அல்லது 70 டன் தொழு உரம் இடுதல்.

   பயிர் : உருளைக்கிழங்கு.



4. தாவர நூற்புழுக்கள் : வேர்முடிச்சு மற்றும் வேர்கருகல் நூற்புழுக்கள்.

அங்ககப் பொருட்கள் : எக்டருக்கு 1 டன் வேப்பம் பிண்ணாக்கு இடுதல்.

பயிர் : கனகாம்பரம்.

5. தாவர நூற்புழுக்கள் : வேர்முடிச்சு மற்றும் மொச்சை வடிவ நூற்புழுக்கள்.

அங்ககப் பொருட்கள் : தொழுஉரம் எக்டருக்கு 25 டன் இடுதல்.

வேப்பம் பிண்ணாக்கு எக்டருக்கு 1 டன் இடுதல்.

பயிர் : வெற்றிலை.

பசுந்தாள் உரமான சணப்பைப் பயிரிட்டு மடக்கி உழுதல்.

6. தாவர நூற்புழுக்கள் : வேர்கருகல் நூற்புழுக்கள்.

எக்டருக்கு 25 டன் எருக்கு இலை உலர்த்தி இடுதல். வேப்பம்பிண்ணாக்கு மரத்துக்கு 2 கிலோ வீதம் தொழு உரத்துடன் கலந்து இடுதல்.

பயிர் : தென்னை, பாக்கு.

7. வேர்கருகல் நூற்புழுக்கள் : எலுமிச்சை நூற்புழுக்கள்.

அங்ககப் பொருட்கள் : மரத்திற்கு 250 கிராம் வேப்பம் பிண்ணாக்கு இடுதல்.

பசுந்தாள் உரமான சணப்பு, கொளுஞ்சி, சென்டுமல்லி ஊடுபயிராகப் பயிரிடுதல்.

பயிர் : சாத்துக்குடி, ஆரஞ்சு, எலுமிச்சை, மற்றும் நாரத்தை.

8. தாவர நூற்புழுக்கள் : வேர் முடிச்சு நூற்புழுக்கள்.

அங்ககப் பொருட்கள் : கவாத்து செய்தபின் உரமிடும்போது கொடிக்கு 250 கிராம் வீதம் வேப்பம் பிண்ணாக்கு இடுதல்.

பசுந்தாள் உரமான சணப்பைப் பயிரிட்டு, பூ பிடிக்குமுன் வெட்டி மண்ணின்மீது இடவும்.

பயிர் : திராட்சை.



## நூற்புழுவைத் தாங்கும் சூரியகாந்தி

தமிழ்நாட்டின் முக்கிய எண்ணெய் வித்துப்பயிரான சூரியகாந்தி தாவர நூற்புழுக்களில் முக்கியமான மொச்சை வடிவ நூற்புழுவினால் பெரிதும் பாதிக்கப்படுகிறது. இந்த மொச்சை வடிவ நூற்புழுவின் தாக்குதலுக்குட்பட்ட பயிர் சோனையடைந்து வளர்ச்சியற்றுக் காணப்படும் சில இடங்களில் செடி நுனியிலிருந்து காய்ந்து கொண்டுவரும். பகலில் நீரிருந்தும் செடி வாடியது போன்று காணப்படும். இவ்வாறாகப் பயிர் சேதமடைந்து மகசூல் இழப்பு ஏற்படுகிறது.

இந்த நூற்புழுவைத் தாங்கி வளரக்கூடிய சூரியகாந்தி வகை ஒன்றைத் தேர்ந்தெடுக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நூற்புழு இயல் துறை மேற்கொண்ட ஆய்வில், மொத்தம் 7 வகைகள் சோதனைக்குட்படுத்தப்பட்டன. அவைகளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) 915 என்ற வீரிய வகையில் குறைந்த அளவில் நூற்புழுப் பெருக்கம் ஏற்படுவதுடன், நூற்புழு நோயை நன்கு தாங்கும் திறனுடன் இருப்பதாகத் தெரிந்தது. இந்த இரகத்தைப் பயிர் செய்வதன் மூலம் சூரியகாந்திப் பயிரிலும் இதனைத் தொடரும் மற்ற பயிர்களிலும் நூற்புழுவினால் ஏற்படும் சேதத்தைப் பெரிதும் தவிர்க்கலாம்.

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்.

எங்கள் ஊர் பிரச்சினை

பிரச்சினை:

செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள பெரிய நாகப்பூண்டி என்ற கிராமத்தில் திருத்தணி - சித்தூர் சாலையிலிருந்து சின்னநாகப்பூண்டி பேருந்து நிறுத்தத்திலிருந்து பெரியநாகப்பூண்டி கிராமம் வழியாக, சுமார் 15 கிராமங்களுக்குச் செல்லும் வழியில், வீரமங்கலம் ஏரிக்கு - ஆந்திர மாநிலத்தில் உற்பத்தி யாகிவரும் கால்வாயில் கட்டப்பட்டிருந்த பாலம், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பெய்த பெருத்த மழையில் உடைப்பு ஏற்பட்டுச் சீரழிந்துவிட்டது. அது போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது. இதை அனைத்துத் தரப்பு அதிகாரிகளும், பார்வையிட்டுச் சென்றார்கள். அதோடு சரி. அதன் பிறகு உரிய நடவடிக்கைக்காக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மனு மூலமாகவும், நேரடியாகவும் தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்கவில்லை. உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

- ஏ. பெருமாள்,
*பெரியநாகப்பூண்டி*
*செங்கை எம்.ஜி.ஆர்.மாவட்டம்.*



தீர்வு :

திருத்தணி உட்கோட்டம், இரா.கி.பேட்டை ஊராட்சி ஒன்றியம் சித்தூர்-திருத்தணி சாலையிலிருந்து பெத்தநாகப்பூண்டி செல்லும் சாலையில், கி.மீ.0/6ல் (வீரமங்கலம் கிராமம் அருகில்) பாலம் கட்டும் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கும் பணி தலைமைப்பொறியாளர் (நெ) வடிவமைப்பு மற்றும் புலனாய்வு, சென்னை அவர்களின் அலுவலகத்தில் நடைபெற்றுவருகிறது. மதிப்பீட்டுத் தொகையை ஊராட்சி ஒன்றியம் இத்துறையிடம் செலுத்தியவுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு வேலையை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

- பு. பாலகிருஷ்ணன்,
*தலைமைப் பொறியாளர்*
*நெடுஞ்சாலை ஊரகப்பணித்துறை,*
*சென்னை.*

பிரச்சினை:

வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் குடியாத்தம் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ளது மாவட்டக் கிளை நூலகம். சுதந்திரப் போராட்டத் தியாகி டி.ஏ.ஆதிமூலம் அவர்களின் பெயரில் உள்ள இந்த மாவட்டக் கிளை நூலகத்தில் பல புத்தகங்கள் உள்ளன. குடியாத்தம் நகரம் மற்றும் குடியாத்தம் சுற்றியுள்ள அனைத்துப் பொதுமக்களுக்கும் மையப் பகுதியில் அமைந்துள்ள இந்த மாவட்டக் கிளைநூலகத்திற்குத் தினமும் ஆயிரத்திற்கு உட்பட்ட பல தரப்பட்ட பொதுமக்கள் வந்து நூலகத்தில் உள்ள புத்தகங்களைப் பயன்படுத்துகின்றனர். இந்த நூலகத்தில் குறைந்த மின்சார அழுத்தமே உள்ளது. அதாவது போதிய மின்சார அழுத்தம் இல்லை. தக்க

அதிகாரிகள் தலையிட்டுக் கவனிப்பார்களா என்று பொதுமக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**-கோ.அரங்கநாதன்**
குடியாத்தம்.



**தீர்வு :**

வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம், குடியாத்தம் கிளை நூலகத்திற்குப் போதிய மின்சார வசதி செய்துதர மாவட்ட நூலக அலுவலருடன் தொடர்பு கொள்ளப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- இரா.கண்ணன்,**
பொது நூலக இயக்குநர்
சென்னை.

**பிரச்சினை:**

**நா**கை காயிதே மில்லத் மாவட்டம் சீர்காழியில் "காந்திஜி நூற்றாண்டு நினைவுப் பூங்கா" உள்ளது. இந்தப் பூங்கா சீர்காழி நகராட்சிக்குச் சொந்தமானது ஆகும். பூங்காவின் உள்ளே பொதுமக்கள் அமருவதற்கு நிறைய சிமெண்டு கட்டைகள் புதிதாகச் சில ஆண்டுகளுக்கு முன்பு நிறுவினார்கள். ஆனால் பொதுமக்கள் உள்ளே அமர்ந்து ஓய்வு எடுப்பதற்குத் தற்போது அனுமதி அளிப்பது கிடையாது. இதே போன்று மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பொது மக்களுக்காகத் தினசரி செய்தித் தாள்களை அமர்ந்து படிப்பதற்காக ரூ.70 ஆயிரம் செலவில் வாசகசாலை கட்டிடம் கட்டப்பட்டு, பணிகள் முடிந்துவிட்டன. மூன்று ஆண்டு காலமாக இந்தப் புதிய கட்டிடத்தில் பொது மக்கள், வாசகர்கள் அமர்ந்து படிக்க அனுமதிக்கவில்லை.



இதனால் 70 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் பாழ்; யாரும் உபயோகிக்க முடியாமல் புதிய கட்டிடம் இருக்கிறது. மேலும், பூங்காவின் வாசக சாலைக்கு எத்தனை நாளிதழ்கள் தினமும் வருகிறது? என்ற விவரம் எழுதி வைக்கப்படவில்லை. மாலை 3 மணி முதல் இரவு 8 மணி வரை செயல்பட்ட பூங்கா வாசகசாலை, தற்போது செயல்படுவது இல்லை. பூங்காவிற்காக வாங்கப்படும் நாளிதழ்களில் காலையில் சில நாளிதழ்களும் மாலையில் சில நாளிதழ்களும் பூங்கா வாசக சாலைக்கு வராமல், சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் போடப்பட்டு, அங்குள்ள ஊழியர்கள், அலுவலர்கள், நகராட்சி மன்றத்தலைவர் படிக்கப் பயன்படுத்தப் படுகிறது. இதனால் பொது மக்கள், வாசகர்கள் நாளிதழ்களைப் படிக்க முடியாமல் பாதிப்பை அடைகிறார்கள். பூங்காவில் உள்ள பொது வானொலிப் பெட்டி பொது தொலைக்காட்சிப் பெட்டி பல ஆண்டுகளாக இயங்கவில்லை.

பூங்காவின் நுழைவு வாயிலில் இருந்த "காந்திஜி நூற்றாண்டு பூங்கா" என்ற போர்டும், வாசக சாலை திறக்கும் நேரத்தை அறிவிக்கும் சிறிய போர்டும் தற்போது அடியோடு இல்லை. உடனே அவை நிறுவப்பட வேண்டும். பூங்காவின் திருமஞ்சன வீதி பக்கத்தில், பூங்காவின் உள்ளே குப்பைகள் நிறையக் கொட்டப்பட்டுவருகிறது. இரவில் பூங்கா இருளடைந்து காணப்படுகிறது. இதற்குக் காரணம் பூங்காவில் மின்விளக்கு வசதிகள் இல்லாததுதான். எனவே, மின் விளக்குகள் போடவேண்டும். எப்போதாவது ஒருமுறை தான் பூங்காவில் இருக்கும் சங்கு ஊதப்படுகிறது. சங்கு வைக்கப்பட்டுள்ள டவரை பள்ளமான இடத்தில் வைத்து இருக்கிறார்கள். இதனால் சங்கின் ஒலி குறைவாக ஒலிக்கிறது. மேடான இடத்தில் சங்கு டவரை வைக்க வேண்டும்.

பூங்காவில் இருக்கும் மோட்டார் பம்பு செட் காயில் வீணாகிவிட்டதால் மோட்டார் பம்பு செட் பல ஆண்டுக ளாக இயங்கவில்லை. இதனால் செடி மரங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சமுடியவில்லை. பூங்காவைச் சுற்றி வேலி அமைக்காத காரணத்தினால் ஆடு, மாடுகள் மேய்கிறது. வேலி

அமைக்கவேண்டும். சீர்காழி நகராட்சி நிர்வாகம் இக் குறைகளைப் போக்கவேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**- ஊர்ப் பொதுமக்கள்**
*சீர்காழி.*

**தீர்வு :**

*சீர்காழி நகராட்சியின் காந்திபூங்காவில், மின் விளக்குகள் நல்ல நிலையில் எரிய விடப்பட்டுள்ளன. அன்றாடம் பொதுமக்கள் படிப்பதற்காக நாளிதழ்கள் வெளியிலேயே வைக்கப்பட்டுள்ளது. சங்கு சரியான நேரத்தில் ஒலிக்கப்பட்டு வருகிறது. பூங்காவில் பெயர்ப் பலகை, காலஅட்டவணை விரைவில் எழுதி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**- த. குமார்,**
*ஆணையர், சீர்காழி நகராட்சி.*



**பிரச்சினை:**

**1.12.96** அன்று வந்த 'தமிழரசு' புத்தகத்தில் எங்கள் ஊர் பிரச்சினை என்று எஸ். முருகேசன், புளியந்துறை எழுதியதற்குத் தீர்வு என்று போட்டு ஆணையர், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம் என்று எழுதியிருந்தீர்கள். ஆனால் இதுவரை எந்தவிதமான தீர்வும் ஏற்பட்டதில்லை. பழுது பார்க்காமலேயே தீர்வு என்று ஆணையர் அவர்கள் எப்படி பதில் எழுதி இருந்தார்கள்? அதனால் பிரச்சினைக்கு உடன் தீர்வு ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**- ஊர்ப் பொதுமக்கள்**
*புளியந்துறை அஞ்சல், சீர்காழி வட்டம்.*

**தீர்வு :**

*கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த, காட்டூர் ஊராட்சி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகஸ்ட் 96 வரை இயங்கிக் கொண்டிருந்தது. மேற்படி நீர்த்தேக்கத் தொட்டிக்குத் தண்ணீர் சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பில்படுகை என்ற கிராமத்திலிருந்து பம்ப் செய்யப்பட்டு கொண்டுசெல்லப்படுகிறது. அவ்வாறு செல்லும்போது தண்ணீர் செல்லும் பி.வி.சி.பைப் போக்குவரத்தின் காரணமாகவும், நீர் அழுத்தம் காரணமாகவும், நெடுகிலும் அடிக்கடி உடைந்து தண்ணீர் இடையிலேயே கசிவு ஏற்பட்டு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏறமுடியாத நிலை ஏற்படுகிறது. இக்குறையை நீக்கச் சில இடங்களில் பி.வி.சி.யைப் லைனுக்குப் பதிலாக ஜி.ஐ. பைப் லைனாக மாற்றி அமைத்தால்தான் தண்ணீர் தடையின்றி மேல்நிலைத் தொட்டிக்கு ஏறும். இதனைச் சீர்செய்து இயங்கும்படி செய்ய, கோட்ட வளர்ச்சி அலுவலக விசைப் பம்பு பராமரிப்பு உதவிப்பொறியாளர் மூலம் உடனடியாக நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. மிக விரைவில் இக்குறைபாடு களையப்பட்டு, நிரந்தரமாகத் தண்ணீர் பெற ஏற்பாடு செய்யப்படும், இது தவிர, இவ்வூராட்சியில் மொத்தம் 20 குடிநீர் கைப்பம்புகள் உள்ளன. இவற்றில் இரண்டில் நல்லநீர் குடிநீர் கிடைக்கிறது. மீதி 18-ல் சிறிது உவர் நீர் வருகிறது. இதைத் தவிர, நல்ல தண்ணீர் கிடைக்கும் பகுதியில் புதியதாக ஒரு 'தாரா கைப்பம்பு' அமைப்பதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.*

*மேலும், மூன்று பேஸ் மின்சப்ளை அடிக்கடி இப்பகுதியில் துண்டிக்கப்படுவதால் மோட்டார், மின்சப்ளை இல்லாத தினங்களில் மட்டும் இயக்க முடியாத நிலையில் இருந்துவந்தது. இது குறித்து 7.3.97ல் மின்வாரியத்தினை அணுகி மூன்றுபேஸ் மின்சப்ளை தொடர்ந்து வழங்கக் கேட்டுக்கொண்டதன் பேரில் 8.3.97ஆம் தேதியிலிருந்து மூன்று பேஸ்*

மின்சப்ளை தொடர்ந்து, வழங்கப்பட்டு, தற்சமயம் மின்மோட்டார் நல்ல நிலையில் இயங்கி அனைத்துத் தெருக்களிலும் உள்ள பைப்புகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- வீ. குருமூர்த்தி
ஆணையர்.
ஊராட்சி ஒன்றியம், கொள்ளிடம்.



**பிரச்சினை:**

எங்கள் ஊர் திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை தாலுகாவிலுள்ள ஊனையூர். இவ்வூரைச் சுற்றிலும் சுமார் 10,000 மக்கள் வசிக்கின்றனர். புகழ்பெற்ற திருநீலியம்மன் ஆலயமும் இங்குதான் உள்ளது. வாரம் ஒருமுறை வாரச் சந்தை சிறப்பாகக் கூடுகிறது. இவ்வூருக்கு அருகே உயர்நிலைப்பள்ளியோ, மருத்துவமனையோ கிடையாது. இவ்வூருக்குத் துவரங்குறிச்சியிலிருந்து 4 முறையும், புதுக்கோட்டையிலிருந்து 2 முறையும் பஸ் வந்து செல்கிறது. ஆனால் இவ்வூர் மக்கள் மருத்துவமனை, அத்தியாவசியப் பொருட்கள் வாங்கவும், திருமணம் போன்ற வைபவப் பொருட்கள் வாங்கவும் பொன்னமராவதி செல்ல வேண்டி இருக்கிறது. மாணவர்களும் இவ்வூரிலிருந்து மேலத்தானியம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுமார் 200 பேர் 5 கி.மீ. தூரம் நடந்தே செல்கின்றனர். பொன்னமராவதி காரையூர், மேல்தானியம், கீழ்த்தானியம் ஆகிய ஊர்களில் இருந்து வணிகர்களும், சிறுவிவசாயிகளும் தங்கள் விளைபொருட்களை தலைச் சுமையாகவே சந்தைக்குக் கொண்டு வருகின்றனர். ஆகவே பள்ளி மாணவர்கள் பயன்பெற, வணிகர்கள், விவசாயிகள், சந்தைக்கு வந்து செல்ல, பக்தர்கள் நீலியம்மனைத் தரிசனம் செய்யவும், நோயாளிகள் மருத்துவமனை சென்று வரவும், அரசு ஊழியர்கள் அலுவலகம் சென்று வரவும் பொன்னமராவதியிலிருந்து மேலத்தானியம் வரும் டவுன்பஸ் சூரப்பட்டி வழியாக ஊனையூருக்கு விட நடவடிக்கை எடுக்கவேணுமாய் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

-அ.சின்னத்தம்பி
ஊனையூர் அஞ்சல்,
இலுப்பூர் வழி, திருச்சி மாவட்டம்.

**தீர்வு :**

மனுவில் குறிப்பிட்டுள்ள ஊனையூர் கிராமத்திற்குத் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் நகரப் பேருந்து ஒன்று மூலம் துவரங்குறிச்சி - ஊனையூர் வழித்தடத்தில் தினசரி 5 முறை (10 தனி நடைகள்) சென்றுவருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

- மேலாண்மை இயக்குநர்
தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம்.

தற்பொழுது பொன்னமராவதி கிளையிலிருந்து இயங்கும் ஒரு நகரப் பேருந்து பல்முனை வழித்தடத் திட்டத்தில், கீழ்க்கண்ட வழித்தடங்களில் நேர நெருக்கடியுடன் இயங்கி வருகின்றது.

பொன்னமராவதி - மேலத்தானியம் - 4 நடைகள் (வழி) ஆலவயல், மரவாமதுரை, சடையம்பட்டி.

பொன்னமராவதி - மேலத்தானியம் - 2 நடைகள் (வழி) காரையூர்.

பொன்னமராவதி - சிங்கம்புனரி - 2 நடைகள் (வழி) திருக்களம்பூர்.

பொன்னமராவதி - சடையம்பட்டி - 2 நடைகள் (வழி) பாலக்குறிச்சி.

பொன்னமராவதி - திருப்பத்தூர் - 4 நடைகள் (வழி) வேலங்குடி.

ஊனையூர் என்ற கிராமம், ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றுள்ள ஊராகும். கோரிக்கைப்படி பொன்னமராவதி - மேலத்தானியம் நடைகளைப் பொன்னமராவதியிலிருந்து சுமார் 6.1 கிமீ. தொலைவில் உள்ள ஊனையூர் வரை நீட்டித்து இயக்கினால் நடைகளின் இயக்க நேரம் அதிகரித்து, அடுத்தடுத்த நடைகளை உரிய நேரத்திற்கு இயக்கிட இயலாத நிலையும், மேற்படி நகரப் பேருந்தின் அனைத்து நடைகளையும் இயக்கிட இயலாத நிலையும் ஏற்பட்டு, பலதரப்பினரிடமிருந்தும் புகார்களுக்கு வாய்ப்பளிக்கும்.

எனவே, புதிதாக நகரப் பேருந்து வழித்தடங்கள் துவக்கும் போது, மேற்கண்ட வழித்தடத்தில் பேருந்து செல்லாத பகுதியில் உள்ள சாலையின் தகுதி மற்றும் நீளம் பற்றிய சான்றிதழ் நெடுஞ்சாலைத் துறையினரிடம் பெற்று, பேருந்து செல்லாத பகுதியில் உள்ள கிராமங்களில் அரசு ஆணையின் படி போதிய மக்கள் தொகை இருப்பின், முன்னுரிமை கொடுத்து அரசு விதிமுறைகளுக்குட்பட்டு நகரப் பேருந்து இயக்கிடப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**- பொது மேலாளர்,**
வீரன் அழகுமுத்துக்கோன் போக்குவரத்துக்கழகம்.

இன்னும் பட்டா வழங்கப்படவில்லை. இது அரசு பரிசீலனையில் உள்ளதாக முந்தைய அரசாங்கங்கள் காலதாமதம் செய்து வந்தது. மேற்படி பட்டா இல்லாமல் மக்கள் மனையின் பெயரில் மேலும் கடன் பெற்று வீடுகட்ட முடியாமலும் விற்பதற்கும் வாங்குவதற்கும் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகையால் மக்கள் பிரச்சினைகளைப் போக்கும் அரசாகச்செயல்படும் தலைவர் கலைஞர் அவர்களின் அரசு மேலும் காலதாமதம் செய்யாமல் உடனே பட்டா வழங்க ஆவன செய்யுமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

**- ஊர்ப்பொதுமக்கள்**
**லட்சுமிபுரம், திருவான்மியூர்.**

## பிரச்சினை:

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சமூகத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மக்கள் வசிக்கும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் திட்டப்பகுதிகளான கங்கை யம்மன் கோவில் தெரு மற்றும் லட்சுமி புரத்தில் அரசு ஆணை எண்.1117 (வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அபிவிருத்தித் துறை) நாள் 27.6.79ன்படி குத்தகை மற்றும் விற்பனை உடன்பாட்டுத் திட்டத்தின் அடிப்படை யிலும் மனைதாரர் வசிக்கும் மனையை அவருக்கே உரிமையாக்கும் பொருட்டு வீட்டு மனைகளுக்குக் கிரயத்தொகையினை நிர்ணயம் செய்து, மனையில் வீடு கட்டுவதற்கு முன்பணமாக ரூ.3000 (மனையின் கிரயத் தொகை ரூ.3000) இரண்டையும் பத்தாண்டு காலத்திற்குள் மாதத் தவணைகளாக செலுத்துமாறு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஆணை பிறப்பித்தது. அதனை ஏற்றுக்கொண்டு ஒதுக்கீடு பெற்றவர்களில் 90% பேர் கட்டி முடித்து வாரியம் வழங்கும் "தடையின்மைச் சான்றிதழ்'' பெற்றுவிட்ட நிலையில்



## தீர்வு:

கங்கையம்மன் கோவில் தெரு மற்றும் லட்சுமிபுரம் ஆகிய இரண்டு திட்டப்பகுதிகளும், சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தில் இடம் பெறும் திட்டப்பகுதிகள் ஆகும். அரசு ஆணை எண்.1117 வீ.வ. (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:27.6.79 மற்றும் அரசு ஆணை எண்.1100 வீ.வ (ம) ந.வ. துறை நாள் 29.8.80 ஆகிய ஆணைகளின்படி மேற்படி பகுதிகளை சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுத்து ஆக்கிரமனதாரர்களுக்குக் குத்தகை மற்றும் விற்பனை உடன்பாடு முறையில் இவ்வாரியத்தால் மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி இரண்டு திட்டப்பகுதிகளும் அரசுக்குச் சொந்தமான நிலங்களாகும். மேற்படி இரண்டு நிலங்களையும் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயருக்கு நில மாற்றம் செய்து உத்தரவு வழங்கக்கோரி சென்னை மாவட்டாட்சியருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரிடமிருந்து நில மாற்ற உத்தரவு ஏதும்

இதுவரை வரப்பெறவில்லை, எனவே மேற்படி நிலங்களை வாரியத்தின் பெயருக்கு நிலமாற்றம் செய்யப்பட்ட பின்னர் மனை ஒதுக்கீடுதாரர்களுக்குக் கிரயப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர்
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்
சேப்பாக்கம், சென்னை-5

### பிரச்சினை:

தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம் சிதம்பரம் தாலுக்காவில் உள்ள ஸ்ரீ. மானம்பாடி கிராமத்தில் அருள்வாக்கு கூறும் வெற்றிவேல் முருகன் திருக்கோயில் அமைந்துள்ளது. சிறப்பு வாய்ந்த இத்திருக் கோவிலுக்கு வந்து செல்லும் பக்தர்களின் வசதிக்காகக் கோவிலின் எதிர்ப்புரம் பஸ் நிலையம், மின் விளக்குகள் அமைக்கப் பட்டுள்ளது. இவ்விடத்தில் இவ்வழித்தடங் களில் செல்லும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் கடந்த 16 ஆண்டுகளாக நின்று வந்த பேருந்துகள் கடந்தசில நாட்களாககோவிலின் அருகில் நிற்பதில்லை. அதனால் பக்தர்கள் மிகவும் அவதிக்குள்ளாகின்றனர். ஆதலால் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தின் மீது நட வடிக்கை எடுத்து மீண்டும் கோவிலின் அருகில் பஸ்கள் நிற்க ஆவன செய்ய உதவுமாறு பணிவுடன் கேட்டுக் கொள் கிறேன்.

சி. தேவநேசன்
சி. மானம்பாடி
பொன்னந்திட்டு அஞ்சல்



### தீர்வு:

சி. மானம்பாடி வெற்றிவேல் முருகன் கோவில் அருகில், கூடுதலாக ஒரு பேருந்து நிறுத்தம் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அவ்வழித்தடத்தில் பணிபுரியும் ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கு மேற்படி முருகன் கோவில் அருகில் பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்ல மீண்டும் ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாறு நிறுத்திப் பயணிகளை ஏற்றி, இறக்காத ஓட்டுநர் மற்றும் நடத்துனர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தகுந்த நெறிமுறைகள் கிளை மேலாளர் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் எங்கள் பரிசோதகர்களைக் கொண்டு அந்த இடத்தில் அவ்வப்பொழுது ஆய்வு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொது மேலாளர் (இயக்கம்)
தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்.

### பிரச்சினை:

நாகை காயிதே மில்லத் மாவட்டம் சீர்காழியில், கடைவீதி அருகே நான்கு சாலைகள் சந்திக்கும் மிக முக்கியமான இடத்தில் "மணிக்கூண்டு" உள்ளது. இந்த மணிக்கூண்டு சீர்காழி நகராட்சிக்குச் சொந்தமானது ஆகும். மணிக்கூண்டில் உள்ள கடிகாரம் கடந்த ஐந்து வருட கால மாக ஓடாமலேயே நின்று கொண்டு இருக்கிறது. 4.25 மணியையே பல வருடங் களாகக் கடிகார முள் காட்டிக்கொண்டு இருக்கிறது. நான்கு பக்கமும் இருக்கும் கடிகாரங்கள் ஓடாத காரணத்தினால் பொதுமக்கள், வியாபாரிகள் சரியான நேரத்தைத் தெரிந்து கொள்ள முடியாமல் மிகுந்த பெரிய பாதிப்பை அடைந்து வருகிறார்கள்.

தற்போது மணிக்கூண்டில் சினிமா போஸ்டர்கள் ஒட்டப்பட்டு, மணிக்கூண்டு பெயிண்ட அடிக்காமல் பாழ் அடைந்து போய் கிடக்கிறது. மணிக்கூண்டில் இருந்த கல்வெட்டும் அழிந்து போய் விட்டது. மணிக்கூண்டின் உயரத்தில் மேலே இருக்கும் பல்பைக் காணவில்லை. புதிய பல்பு பொருத்தப்பட வேண்டும்.

மணிக்கூண்டைச் சுற்றியுள்ள ஆக்கிர மிப்புகளை அகற்றி விட்டு, மணிக்கூண்டின்

கீழே உள்ள இரும்பு கேட்டை நேராக, சரியாக அடைத்து வைக்க வேண்டும். மணிக்கூண்டை தினமும் பராமரித்து, லைட் போட ஒரு நகராட்சி ஊழியரை உடனே நியமனம் செய்ய வேண்டும். முன்பு-பல வருடங்களுக்கு முன்பு மணிக்கூண்டு ஓடிக்கொண்டு இருந்தபோது, ஒரு நகராட்சி ஊழியர் மணிக்கூண்டை பார்த்துக் கொள்ள பணிபுரிந்து வந்தார் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது ஆகும். எனவே, இப்போதும் ஒரு ஊழியரை பணிபுரிய நியமனம் செய்வது மிக அவசியம்.

எனவே, சீர்காழியில் பல வருடங்களாக ஓடாமல் இருக்கும் மணிக்கூண்டை மீண்டும் ஓடச் செய்ய உடனே நடவடிக்கை எடுக்குமாறு தயவுசெய்து கேட்டுக் கொள்கிறேன்.

— ஆர். ராஜதுரை
சீர்காழி



**தீர்வு:**

சீர்காழி நகராட்சியில் கடைத்தெருவிலுள்ள மணிக்கூண்டைப் பழுது பார்க்க மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, சென்னை பி.ஆர். & சன்ஸ் நிறுவனத்தினரிடம் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. கூடிய விரைவில் அந்நிறுவனத்தினர் வந்து பார்வையிட்டு, பழுதுநீக்கம் செய்து கடிகாரம் ஓடவிடச் செய்யப்படும். மேலும், மணிக்கூண்டைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை விரைவில் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவிக்கப்படுகிறது.

— த. குமார்,
ஆணையர்
சீர்காழி நகராட்சி

**பிரச்சினை:**

எங்கள் ஊரில் 150 வீடுகள் உள்ளன. 400 பேர்கள் வசித்து வருகின்றனர். எங்கள் ஊருக்கு ஒரு குழந்தைகள் சத்துணவுக்கூடம், இங்கு ஆற்றுக்கால் பாசனம் வருகிறது. ஆகையால் நெற்கள் விரிப்பதற்குக் களமும் ஒரு கைப்பம்பு குடிதண்ணீரும் தேவை. இதைத் தமிழக அரசு மூலம்—இந்த பிரச்சினையை நிறைவேற்றித் தரும் உங்கள் பத்திரிகைக்கு எங்கள் கிராமப் பொது மக்களுக்கு என்றும் மறவா ஒரு தொண்டாகும்.

— கே. சௌந்திரபாண்டியன்,
ஏ. சுந்தரராஜபுரம், எட்டிமங்கலம் அஞ்சல்,
மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்

**தீர்வு:**

குடிநீர் வசதி ஏற்கெனவே உள்ளது; இருப்பினும் போதிய அளவு வழங்குமுகத்தான், பைப்லைன் விஸ்தரிப்பு அல்லது ஒரு கையுழுத்தக்குழாய் அமைக்கும் பணி பரிசீலனையில் உள்ளது. விரைவில் அமைக்கப்படவுள்ளது. ஏனைய கோரிக்கைகள் குறித்து காலப்போக்கில் நிதி வசதிகள் வரப்பெற்றதும் விதி முறைகளின்படி ஊராட்சி மன்றம் அல்லது ஊராட்சி ஒன்றியம் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

— சு. முத்துராமலிங்கம்
ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம்
கொட்டாம்பட்டி
மதுரை மாவட்டம்






'சோறு' சிறுகதை, என் உள்ளத்தை நெருடி கண்ணீர் விடச் செய்துவிட்டது.

- பி.எம்.வேலப்பன்
பேராண்டையூர்.

அரசின் சாதனைகள், திட்டங்களை மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் தொகுத்தளித்த தமிழரசுக்குப் பாராட்டுகள்.

- எம்.என்.குபேந்திரன்
வடகாடு, புதுக்கோட்டை

குறைந்த முதலீட்டில் கட்டடங்கள் - தரமான யோசனைகள் தந்த தமிழரசை வாழ்த்துகிறேன்.

- கா.தா.ராஜசேகர்
மங்களபுரம்

தமிழரசில் கையாளப்படும் சீரிய நடையும், யதார்த்தமான - தெளிவான கவிதைகளும் இதழுக்கு மெருகேற்றிவருகின்றன. தொடரட்டும் தமிழ்ப்பணி.

-க.கோடீசுவரன்
நக்கலூர்.

'காலமெல்லாம் காளான் வாழ்க' ஒரு பயனுள்ள கட்டுரை; காலமெல்லாம் தமிழரசு வாழ்க!

-மாடப்பள்ளி ஜெயசீலன்
வடலை.

16.4.97 இதழை 'மாணவர் சிறப்பு மலர்' என்றே குறிப்பிடலாம்; கல்வி-மேற்படிப்பு-வேலைவாய்ப்பு எல்லாம் கொடுத்து இளம் நெஞ்சங்களை அசத்திவிட்டீர்கள்.

- கு.சகந்நாதன்
சேலம்.

'உயிர்த்திரவம் இரத்தம்' பற்றிய மருத்துவக் கட்டுரை, நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளும் நல்லபல செய்திகளைக் கொண்டிருந்தது; அதை வெளியிட்டமைக்கு நன்றி.

- எஸ்.நாகராசன்
மேலப்பாதி.

அரசின் செய்திகளை அறிந்துகொள்ளவும், மேலும் பல, அரிய செய்திகளைப் படித்து உதவவும் 'தமிழரசு' துணை செய்கிறது.

- கே.பிரஷ்னேவ்
ராக்கம்கோட்டூர்.

தாங்கள் தனிப்பட வெளியிட்ட 1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை பலவகைகளில் எமக்கு உதவி - பாதுகாத்து வைக்கச் செய்துவிட்டது.

- என்.டி. முருகேசன்
ஆனைக்குப்பம்

தமிழகச் சுற்றுலாத் தலங்கள் பற்றிய சிறப்பிதழ் அருமையாக அமைந்திருந்தது; ஆனால் கோயில்கள் நிறைந்த எங்கள் குடந்தை அதில் குறிப்பிடப் படவில்லையே - ஏன்?

- க. திவாகராசன்
கொரநாட்டுக்கருப்பூர்.

தமிழரசில் இடம்பெறும் சிந்திக்கத் தூண்டும் சிறுகதைகள், மருத்துவக் கட்டுரைகள் எல்லாமே படித்து இன்புறத்தக்கதாக உள்ளன - மகிழ்ச்சி.

- எம். ராஜேஸ்வரி

அட்டைப் படங்கள் அழகுக்கு அழகு சேர்க்கின்றன; வடிவமைப்பாளருக்குப் பாராட்டு.

- குடவாசில் சுந்தரவேலு
புளியம்பேட்டை

☎ : 42343

# உதகமண்டலம் கூட்டுறவு பண்டகசாலை

எண். K. 505, உதகமண்டலம்

தலைவர் :
**அ. ம. கதிர்காமம்**

துணைத்தலைவர் :
**ஜே. பிரபு**

பதிவான நாள் : **22-4-1927** ஆரம்ப நாள் : **9-5-1927**

## தற்போதைய பண்டக இயக்குநர்கள் குழு

| | | |
|---|---|---|
| 1. | திரு. **அ.ம. கதிர்காமம்** | தலைவர் |
| 2. | திரு. **ஜே. பிரபு** | துணைத் தலைவர் |
| 3. | திரு. **பி. ராஜு** | இயக்குநர் |
| 4. | திரு. **எ. முனுசாமி** | " |
| 5. | திரு. **என். சீனிவாசன்** | " |
| 6. | திரு. **ஓ. பாலன்** | " |
| 7. | திருமதி. **ம.க. இராசாமணி** | " |
| 8. | திருமதி. **ஆர். பிரேமா** | " |

பொருளாளர் : திரு. **கே. போரைய்யா**

தலைமை எழுத்தர் : திருமதி. **சி.கிரிஜா**

| | |
|---|---|
| மொத்த அங்கத்தினர்கள் | : 2322 |
| ஆண் | : 2092 |
| பெண | : 230 |
| அரசுப் பங்குத் தொகை | : 92,580.00 |
| மொத்த பங்குத் தொகை | : 1,67,826,69. |
| நியாய விலைக் கடைகள் | : 12 |
| இதில் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை | : 10535 |
| காபி கிரைண்டிங் பிரிவு | : 1968 முதல் இயங்கி வருகிறது.சுத்தமான கலப்படமற்ற காபிதூள் எங்களிடம் கிடைக்கும். |
| மளிகைப் பிரிவுகள் 4 | : இந்நான்கிற்கும் பொது மக்கள் விலை மற்றும் தரத்தைப் பார்த்து பயனடைவீர். |

நமது சங்க உறுப்பினர்கள் 100 ரூபாய்க்கு மேல் பொருட்கள் தலைமையக மளிகைப்பிரிவில் வாங்குவோருக்கு ரூ. 2 வீதம் தள்ளுபடி செய்து தருகிறோம்.

| | |
|---|---|
| நவீன விற்பனை நிலையம் | : 1 |
| பெரிய அளவிலான சில்லறை விற்பனை நிலையம் | : 1 |

மேலும எங்களுக்கு ஆதரவு கொடுத்துவரும் அனைத்து சங்க உறுப்பினர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# சுற்றுப்புறச் சுகாதாரம்

சுற்றுப்புறச் சுகாதாரம் என்பது நம்முடைய ஆரோக்கியம் மற்றும் நிலைநிற்புக்கான நம்முடைய சுற்றுச் சூழ்நிலை கட்டுப் படுத்தக் கூடியதாகும். வேறு விதத்தில் சொன்னால்-நல்ல சுகாதாரம் என்பது அசுத்தப்பொருட்களை அப்புறப்படுத்துதல் ஆகும். கீழ்கண்டவை அதில் அடங்கும்.

1. மனிதக்கழிவுப்பொருளை அப்புறப்படுத்துதல
2. கழிவு நீர் அப்புறப்படுத்துதல்
3. குப்பைகளை அப்புறப்படுத்துதல்
4. பசுஞ்சாணம் அப்புறப்படுத்துதல்
5. வீடு சுத்தம் மற்றும் புகையில்லா அடுப்பு
6. தன் சுத்தம்
7. உணவு சுத்தம்
8. பாதுகாக்கப்பட்ட குடிநீர்

**சுற்றுப்புறச் சூழ்நிலைக்குப் பொறுப்பு யார்**

சுகாதார நிலையை இரு கோணங்களில் பார்க்கவேண்டியுள்ளது. ஒன்று தனிப்பட்ட மற்றும் குடும்ப சமுதாய நபர்களின் நேர்மையற்ற மற்றும் பழக்க நடத்தையினால் எற்பட்டுள்ளது. உதாரணம்-கையை அலம்புதல், நகம் வெட்டுதல், பூமியில் துப்புதல், சிறுநீர் கழித்தல், தனியார் நடத்தையில் சேரும் குடும்ப சுகாதாரம் - குடும்பத்திற்குக் குடும்பம் சுகாதாரம் என்பது சமுதாயத்தின் பொறுப்பாகும்.

வேறு கோணத்தில் பார்த்தால் சுகாதார மின்மையால் வரும் நோய்களைக் குறிக்கும்.



**சுகாதாரத்தின் நன்மைகள்**

உதாரணம் - கழிப்பறையைப் பயன்படுத்தினால் குழந்தைகளுக்கு வரும் வயிற்றாலையைக் கணிசமாக குறைக்கலாம்.

2. கழிவறை உள்ள வீட்டிலுள்ள குழந்தையாவது அவை இல்லாத வீட்டிலுள்ள குழந்தைகளைக் காட்டிலும் மும்மடங்கு உயிர் வாழ்வார்கள் என்று ஒரு ஆய்வு கூறுகிறது.

ஒரு குடும்பத்தின் சுகாதாரச் சீர்கேடு மற்ற எல்லாக்குடும்பத்தையும் பாதிக்கும்.

**எதனால்?**

ஏன் சுற்றுப்புறச் சுகாதாரம் முக்கியத்துவம் வாய்ந்தது?

மோசமான சுகாதாரம் தண்ணீர் மற்றும் உணவு வகைகள் கலப்படம் செய்து மக்களை நோயாளி ஆக்கும். மோசமான சுகாதாரம் கொசு, ஈ, எலி இவைகளுக்கு உணவு மற்றும் உற்பத்தி இடம் கொடுக்கும். மோசமான சுகாதாரம் வறுமைக்குக் காரணமாகும்.

**வறுமையின் சுற்று**

வறுமையினால் மோசமான சூழ்நிலை உருவாகி உடல் பாதிக்கும், உடல் பாதிப்பால் உற்பத்தித்திறன் குறைவு, உற்பத்தித்திறன் குறைவால் குறைவான பணம் கிடைக்கும். இச்சுற்று உடைப்பதற்கு நல்ல சுகாதாரமும் நோய்க்கட்டுப்பாடும் வேண்டியுள்ளது. இந்திய அரசு 2000-க்குள்ளாக 'எல்லாவற்றிற்கும் ஆரோக்கியம்' என்ற இலக்கு வைக்கப்பட்டுள்ளது. நல்ல சுகாதாரம் இல்லையெனில் அவ்விலக்கை ஒருக்காலும் பெறமுடியாது.

ஜனத்தொகைப் பெருக்கத்தின் காரணமாக, நகர்புறங்கள் குடிசைப் பகுதி மற்றும் நகர்புற பணிகள் இல்லாத இடத்திலும், விஸ்தரிக்கப்பட்டு விடுகின்றன. அதனால் சுற்றுச் சூழ்நிலை சுகாதாரத்திற்குச் சமுதாய சேவை வேண்டியிருக்கிறது.

**நோய்களின் சாதனம்:**

1. ஒட்டுண்ணிகள்
2. நுண்ணுயிர்கள்

**நோய்வாய்ப்படுவதற்கு உள்ள வழிகள்:**

1. உணவு

2. குடி தண்ணீர்

3. அழுக்குக் கைகள்

4. நடத்தல்

5. ஈ

**சுற்றுப்புறச் சுகாதாரத்தில் பெண்களின் பங்கு**

மக்கள் தொகை அதிகரித்துக்கொண்டிருக்கும் இந்த வேளையில் சுகாதாரச் சூழ்நிலைக்குக் கேடுகள் ஒருபுறம், இதன் மூலம் பல நோய்கள் ஏற்படுகின்றன. அரசாங்கமும் மற்ற சுகாதார நிலுவணங்களும் இதைக் கட்டுப்படுத்த முயற்சி செய்கிறது. ஒவ்வொரு பெண்ணும் இம்முயற்சியில் ஈடுபடுத்தப்பட்டால் சுகாதார முறையில் மக்கள் ஆரோக்கியமான வாழ்வு வாழமுடியும் என்பதில் ஐயமில்லை.



**பெண்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை:**

1. சிறு குழந்தைப்பராமரிப்பு

2. குடி தண்ணீர் மூலம் நோய், அதைத் தடுக்கக்கூடிய முறைகளைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும்.

3. பழங்கள், காய்கள் முதலியவற்றைச் சாப்பிடுவதற்கு முன்பு கழுவ வேண்டும். அதன் பயனையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

4. வீட்டில் உள்ள கழிவு திடப்பொருள்கள் மீண்டும் பயன்படுத்தக்கூடியதைப் பயன்படுத்த வேண்டும். பயன்படுத்த முடியாததைச் சுகாதார முறைப்படி குப்பைத் தொட்டியில் போடவேண்டும்.

5. வீட்டைச் சுகாதாரமான முறையில் வைத்துக் கொள்ள வேண்டும். கழிப்பறையைக் கழுவவேண்டும். தரையைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். ஜன்னல் வழியாகக் கொசுக்கள் வராதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

6. சமையல் அறையைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். எலி, ஈ, போன்றவை வராமல் எல்லா உணவுப் பொருட்களையும் மூடி வைக்கவேண்டும்.

7. வீட்டின் அமைப்பு காற்று, ஒளியுமாக இருக்க வேண்டும்.

8. புகையில்லா அடுப்பு உபயோகிக்கவேண்டும்.

9. வயிற்றுப்போக்கு, சரிவிகித உணவு தெரிந்து பராமரிப்பு பற்றி பயிற்சி கொடுக்கவேண்டும்.

**அசுத்த நீரின் மூலம் பரவும் வியாதிகள்**

இதை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. அசுத்த நீரை உட்கொள்வதால் ஏற்படும் வியாதிகள்

2. அசுத்த நீர் தேங்குவதால் ஏற்படும் வியாதிகள்

**அசுத்த நீரை உட்கொள்வதால் ஏற்படும் வியாதிகள்**

பாதுகாப்பற்ற குடிநீரைப் பருகுவதால் கீழே குறிப்பிட்டுள்ள வியாதிகள் ஏற்படுகின்றன.

1. வாந்திபேதி
2. காலரா
3. மஞ்சள்காமாலை
4. டைபாய்டு
5. இளம்பிள்ளை வாதம்
6. குடற்புழுக்கள்
7. நரம்புச் சிலந்தி

**வாந்தி பேதி**

வாந்திபேதி எந்தக்கிருமியினால் ஏற்பட்டாலும் உடலிலிருந்து அதிக நீர் இழப்பு ஏற்படுகிறது.

- வயிற்றுப்போக்கு வாந்தியின் காரணங்கள்
- மலத்தினால் அசுத்தப்பட்ட நீரை உட்கொள்ளுதல்
- ஈக்கள் மொய்த்த பண்டங்கள் உட்கொள்ளுதல்
- சுத்தம் செய்யாத கைகளினால் உணவைத் தயாரித்து உட்கொள்ளுதல்

**காலரா**

அதிக வாந்தி வயிற்றுப்போக்குடன் ஏற்படும் இந்த நோய் நீர்நிலையங்களிலிருந்தும் மற்ற இடங்களி லிருந்தும் பரவலாம்.

நோயாளியின் மலத்திலும், வாந்தியிலும் வெளிவரும் காலரா கிருமிகள் நீர் நிலையங்களில் பாதிப்பால் பெரிய அளவில் அந்த நோய் பரவக்கூடும்.

**மஞ்சள் காமாலை**

இந்த நோய் அசுத்தமான நீரைப் பருகுவதாலும், ஈக்கள் மொய்த்த பண்டங்களை உட்கொள்வதாலும் ஏற்படுகிறது. இந்த வியாதி வந்தவர்களுக்குக் கண்கள், நகம், உடல் மஞ்சள் நிறத்தில் இருக்கும். டைபாய்டு மற்றும் பாரா டைபாய்டு காய்ச்சல் கூட மற்றவைகளைப்போல அசுத்த நீரால் பரவுகிறது.

**இளம்பிள்ளை வாதம்**

இது குழந்தைகளைப் பாதிக்கும் ஒரு கொடிய நோய். இந்நோயினால் குழந்தை இறந்தும்போகலாம் அல்லது வாழ்க்கை முழுவதும் கை மற்றும் கால்களை நிரந்தரமாகச் செயலிழக்கச் செய்யலாம். இந்த வியாதியும் அசுத்த நீரினால் பரவுகிறது.

**குடற்புழுக்கள்**

வயிற்றுப்போக்கு, பசியின்மை, பலவீனம், இரத்தச்சோகை இந்நோயின் அறிகுறிகள். அசுத்த நீர் உபயோகித்தல், காலணி அணியாமல் நடப்பது போன்றவைகளால் நோய் ஏற்படுகிறது.

**நரம்புச் சிலந்தி**

மக்கள் குடிநீரினை, படிக்கட்டுக்கிணறுகள், ஆறு, ஏரி குளங்களிலிருந்து கொண்டுவரும்போது நரம்புச் சிலந்தி என்ற கடும் வியாதிகளினால் பாதிக்கப்படுகிறார்கள்.

**தண்ணீர் தேங்குவதால் ஏற்படும் வியாதிகள்**

அசுத்த நீர் தேங்குவதால் கொசு வளர்ச்சி அடையும். இதனால் ஏற்படும் வியாதிகள்.

1. யானைக்கால்
2. மலேரியா
3. மூளைக்காய்ச்சல்

இந்த வியாதிகள் உள்ள மனிதனைக் கடித்த கொசு ஆரோக்கியமான மனிதனைக் கடிப்பதால் இந்த வியாதிகள் பரவுகிறது.

2. பாதுகாக்கப்பட்ட கைப்பம்புகளிலிருந்து எடுத்துவரும் குடிநீர் சுகாதார முறைப்படி வீடுகளில் கையாளாவிட்டால அவை அசுத்தமடைவதற்கும் வாய்ப்பு உண்டு. இதைத் தவிர்க்க,

1. குடிநீர் எடுக்கும் பாத்திரங்களைத் தினமும் சோப்பு அல்லது சாம்பல் போட்டுச் சுத்தமாகக் கழுவ வேண்டும்.
2. குடிநீரைச் சுத்தமான கெட்டித் துணியினாலோ அல்லது வடிகட்டியினாலோ வடிகட்டி எடுக்கவேண்டும்.
3. வடிகட்டி எடுத்த நீரைக் கைப்படாமல் மூடிபோட்டு மேடையின்மேல் வைக்கவேண்டும்.
4. குடிநீரைக் காய்ச்சிக் குடித்தல் சிறந்தது.
5. நீரைக் குடத்திலிருந்து எடுக்கும்போது கைகொண்டு, பாத்திரம்போட்டு மொண்டு எடுக்காமல் குடத்தைச் சரித்து எடுக்கவேண்டும்.

**நுண்ணுயிர்களால் பரவும் நோய்கள்**

நுண்ணுயிர்களால் ஏற்படும் நோய்களுக்கும் (பூச்சிகள்) சுகாதாரத்திற்கும் சம்பந்தம் உள்ளன. ஏனென்றால் அழுக்கு நிறைந்து தேங்கிய நீரில் பூச்சிகள் உற்பத்தியாகின்றன. மற்றும் சுகாதாரமற்ற நிலத்திலுள்ள கழிவுகளிலிருந்து வரும் பூச்சிகள் வீட்டுக்குள் நுழைகின்றன. பூச்சிகளினால் ஏற்படும் நோய்களைத் தடுக்க, முறையான சுகாதார நடவடிக்கைகள் உள்ளன. இவற்றுள் வீட்டில் செய்யப்படக்கூடியவை மற்றும் சமுதாயத்தில் செய்யப்படக்கூடியவையும் உள்ளன.



**கீழ்கண்ட பூச்சிகளினால் பரவும் நோய்கள்**

1. கொசுக்களினால் பரவும் நோய்கள் :
   1. மலேரியா
   2. என்செப்ளலிட்டிஸ்
   3. டிங்கு காய்ச்சல்

**மணல் பூச்சியினால் பரவும் நோய்கள்**

1. கலாஜார்

- முறையான சுகாதார முறை மூலம் எளிதாக இந்நோயைத் தடுக்கலாம்.

2. மலேரியா

- இந்தியாவில் மூன்று விதமான மலேரியா காய்ச்சல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தண்ணீரினால் பரவும் நோய்கள், நோய்களின் விவரங்கள், அறிகுறிகள் மற்றும் அவைகளைத் தடுப்பதற்கான சுகாதார முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கொசுக்களால் ஏற்படும் நோய்கள் மரணத்திற்குக் காரணமாக இல்லை என்றாலும் அவைகள் நம்மைப் பலவீனமாக்கி வேலை செய்வதற்குக் கடுமையாக்கி இதர வியாதிகள் வருவதற்குக் காரணமாகும்.

**மலேரியா அறிகுறிகள்**

தலைவலி
குளிர்ச்சி
உடம்புவலி
மிக அதிகமான காய்ச்சல்
வேர்வை

**சிகிச்சை**

குளோரைகுயின் பாஸ்பேட்

கலாஜார் நோய் வந்தால் நாம் பலகீனம் மற்றும் நோய்கள் வருவதற்கு ஏதுவாகும். காய்ச்சல், இடை குறைத்தல், கல்லீரல், கணையம் பெரியதாகும்.

**சிகிச்சை**

கலாஜார் மருத்துவர்களிடமிருந்து சிகிச்சை பெறலாம்.

## மனித கழிவுப் பொருட்கள்

வெளியில் மலம் கழிப்பதனால் 50-க்கும் மேற்பட்ட வித்தியாசமான நோய்கள் பரவ வாய்ப்புள்ளன. இவற்றில் டைபாய்டு காய்ச்சல், வயிற்றோட்டம், காலரா, வயிற்றுக்கடுப்பும் அடங்கும். மனித (கழிவுப் பொருள்) மலத்தின் மூலமாக 80 சதம் நோய் நோயாளியிடமிருந்து நோயற்றவர்களுக்குப் பரவுகிறது.

**பெண்களின் தனிப்பண்பு**

வெளியில் மலம் கழிப்பது தனிப்பிரச்சனையைப் பெண்களுக்கு உருவாக்குகிறது. அவர்களின் அனுபவங்கள் :

1. வெளியில் செல்வது நாட்டுப் பண்பாகிவிட்டது.
2. தனியில் செல்வது குறைவு.
3. அவர்கள் ஒடுக்கப்படுவதால் இருட்டில் கழிப்பது எதிர்பார்க்கப்படுகிறது.
4. இருட்டில் போவதால் வரும் ஆபத்து.
5. எதிர்பாராமல் விழுவது.
6. பாலியல் உறவின் ஆபத்து.
7. மோசமான வெப்பநிலை.

சுற்றுப்புறச் சூழ்நிலையை முன்னேற்ற மடைவதற்குச் சில நடவடிக்கை எடுக்க வேண்டும். மனிதக் கழிவை வெளியேற்ற முறையான கழிப்பறை வசதி மற்றும் வெளியில் செல்வது தவிர்ப்பது ஒரு முக்கியமான நடவடிக்கையாகும்.

**மனிதக்கழிவை முறையாக வெளியேற்றுதல்**

மனிதக்கழிவை வெளியேற்ற நிறைய வகைகள் உள்ளது. இவற்றில் கீழ்க்கண்டவை சிறப்பானவை.

1. கழிவு நீர்க்குழாய் (Sewerage)
2. செப்டிக் டேங்க்
3. சுலோப் சச்சலோயா
4. எலக்ட்ரிக் டாய்லெட்
5. போர்டபில் டாய்லெட்

**தண்ணீர் மூடியுள்ள கழிப்பிடம் (Flushout)**

கீழ்க்கண்ட பகுதிகள் உள்ள கையால் சுத்தம் செய்யப்படும் கழிப்பிடங்கள்.

1. 90 செ.மீ.சதுரமான 5 செ.மீ.கனமான தகடு அல்லது பலகை.



2. பேசினுக்கும் கழிவுகளுக்கும் உரிய வாட்டம் (slope) கொடுத்து நீர் தேங்காமல் இருக்க வேண்டும். டிரேப்பை பேனில் சேர்க்க வேண்டும். நீர் கசியாமல் இருக்க, அதற்கான சீர் தடவவேண்டும். 1.8 செ.மீ.வட்டமுள்ள குழாயை அதற்குள் பொருத்தவேண்டும். 7.5 செ.மீ. வட்டமுள்ள மற்றும் 3 செ.மீ.நீளமுள்ள குழாயை அது உபயோகப்படுத்தவேண்டும். 5 செ.மீ. வட்டமுள்ள அல்லது சதுரமாயுள்ள மேலும் 15 செ.மீ.முதல் 22.5 செ.மீ. ஆழமுள்ள நீர்த்தேக்கத்தில் பொருத்தவேண்டும்.

**அழுகச்செய்யும் அறை** (Septic Tank)

தண்ணீர் கசியாத அறையாகக் கட்டி அதில் கழிவறையிலிருந்து வரும் குழாயை இணைக்க வேண்டும்.

## வயிற்றுப்போக்கு

### வயிற்றோட்டம்

வயிற்றாலை என்பது பல நோய்களின் பெரிய பிரச்சனை. இது மலங்களுடன் தொடர்பு கொண்டதன் மூலம் பரவுகிறது அல்லது கலப்படமான உணவு அல்லது கலப்படமான தண்ணீராலும் பரவும். இவற்றுள் பல நோய்கள் பாக்டீரியாவினால்தான். காலரா மற்றும் பல பூச்சிகளினாலும் வரலாம்.

### வயிற்றுப்போக்கு

வயிற்றுப்போக்கு என்பது ஒருநாளில் மூன்று அல்லது ஏராளமான நீரிழப்பு ஏற்படுவது ஆகும். இது அரிசி தண்ணீராகவோ அல்லது இரத்தமாகவோ, அல்லது சளியாகவோ இருக்கலாம். வயிற்றுக்கடுப்பு இரத்தச்சளிபோல் இருக்கும். ஆனால் அடிக்கடி அதிகமாகாது.

### வயிற்றுப்போக்கிற்கான காரணங்கள்

**அ. தண்ணீர்**

1. அசுத்தமான குடிநீர்
2. தூய்மையான குடிநீரை உபயோகப்படுத்தாமையும், சுகாதாரமின்மையுமே.

**ஆ. உணவு**

1. ஈக்களால் சாப்பிடும் உணவு கெடப்பட்டிருப்பதால்
2. பாதியாக வேகவைக்கப்பட்ட உணவு என்பதால்
3. பழங்களையும் காய்கறிகளையும் தண்ணீரால் கழுவாமல் உண்பதால்

## பாதுகாக்கப்பட்ட குடிநீர்

### அடிப்படை

பொதுவாகக் கீழ்கண்ட அடிப்படைத்தன்மை உடையவையாக இருக்கவேண்டும்

1. சுத்தம் மற்றும் ஒளி பரவும்படியாக இருக்க வேண்டும்.
2. வண்ணம் இல்லாதவாறு இருக்கவேண்டும்.
3. நாற்றம் இல்லாது இருக்கவேண்டும்.

மேற்கண்ட விபரங்கள் இல்லாமல் இருந்தாலும், சுத்தமான தண்ணீர் என்று சொல்ல முடியாது. தண்ணீரிலுள்ள நீர் கிருமிகளினால் தண்ணீர் பாதிக்கப்பட்டிருக்கலாம்.

### தண்ணீரின் முக்கியத்துவம்

மக்களின் அன்றாடத் தேவைக்குத் தண்ணீர் முக்கியமாகும். ஆனால் தண்ணீர் குறிப்பிட்ட அளவிற்குத்தான் கிடைக்கும். எனவே, தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். மேலும் குடிநீர் கிடைப்பது அரிதாக உள்ளது. எனவே தண்ணீரைச் சுத்தப்படுத்தி குடிதண்ணீராக மாற்றவேண்டும். மேல்மட்டத்திலுள்ள தண்ணீர் கெடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால் தண்ணீரை மாற்ற இயலாது.

இந்தியாவில் 15,00,000 ஐந்து வயதிற்குக் குறைவாக உள்ள குழந்தைகள் வயிற்றுப் போக்கினாலும் மாசு படிந்த குடிநீரினாலும் இறக்கின்றனர்.



## திரவ கழிவுப் பொருள்

### திரவக்கழிவுப்பொருள் என்றால் என்ன ?

திரவக்கழிவுப்பொருள் கீழ்கண்டவற்றிலிருந்து வருகின்றன;

1. வீட்டிலிருந்து (சமையல், குளியல், துவைத்தல், வீட்டை கழுவிவிடும்போது).
2. தண்ணீர் இருக்கும் இடங்களில் (பொது கிணறு மற்றும் துவைக்கும் இடங்கள்).
3. கால்நடைகள் மற்றும் மற்ற மிருகங்களின் இருப்பிடம் (செட்).
4. சந்தைகள், மாமிசக்கடை (Slaughter house) மற்றும் பொதுபண்ணை
5. குடிசைத் தொழில்களும் மற்ற தொழில்கள்.
6. குளியல் மற்றும் சலவைத்தொழில் நடைபெறுமிடங் களிலிருந்து.

### திரவ கழிவின் அபாயம்

1. மனிதக்கழிவுடன் கலந்த குடிதண்ணீர்.
2. தேங்கிய நீரின் உருவாக்கம்.
3. கொசு, ஈ, மற்றும் இதர பூச்சிகள் ஈரக்கசிவான இடங்களில் உருவாதல்.
4. தேங்கிய தண்ணீர் 20 மீட்டர் தொலைவிற்குள் கிணற்றுக்கு அருகில் இருப்பதால் கிருமிகள் உருவாவதற்குக் காரணமாக உள்ளது.

தொழிற்சாலைகள் அல்லது வயல்களில் இருந்து குடிதண்ணீர், மருந்துகள் மற்றும் சூழ்நிலைச் சீர்கேட்டால் சுகாதாரச்சீர்கேடு ஏற்படுகின்றன.

## திரவக்கழிவை வெளியேற்றுதல்

### வெளியேற்றும் முறைகள்

திரவக் கழிவை வெளியேற்றுவதற்குப் பல முறைகள் உள்ளன. அவையாவன:

**1. சாக்கடை**

1. வீட்டுக் கழிவு நீர், தோட்டம் ஆகியவற்றிலுள்ள கழிவு நீரைச் சாக்கடை மூலம் வெளியேற்ற லாம்.
2. உறுஞ்சுக்குழி அமைக்கலாம்.
3. கழிவு நீரைக் குடிப்பதைத் தவிர, மற்றவை களுக்குப் பயன்படுத்துமாறு செய்யலாம்.

### உறிஞ்சுக்குழி

உறிஞ்சுக்குழி மிகக்குறைந்த செலவில் அமைக்கலாம்.

குழி தோண்டுவதற்கு உரிய உபகரணங்கள் மற்றும் செங்கற்கள் மற்றும் வாளிகள். நீர்வளம் மிக்க பகுதிகளில் உறிஞ்சுக்குழி சரிவரச் செயல்படாது.

மழைக்காலங்களில் உறிஞ்சுக்குழி கட்ட வேண்டிய வழி முறைகள் :

இரண்டு மீட்டர் ஆழமுள்ள குழியின் விட்டம் 1.5 மீட்டராக இருக்கவேண்டும். குழியில் கற்களாலும் 3 பாகம் அளவு கற்கள் குழியின் அடிப்பாகத்தில் நடுப்பகுதியிலும் மற்றும் கால்பாகம் கற்கள் குழியின் மேற்பாகத்தில் இருக்கவேண்டும். குழியின் மேல்பாகத்தில் மணல்கொண்டு மூடவேண்டும். வீட்டுக்கழிவு நீர்ப் பாதையை இக்குழியில் சேர்க்கவேண்டும்.

6 அங்குலம் விட்டமுள்ள சிறிய தொட்டியின் அடிப்பகுதியில் ஓட்டையில் போடவேண்டும். அப்பொழுதுதான் வடிகட்டும்பணி நடைபெறும்.

உறிந்த குழாய்த்தொட்டியைச் சுற்றிலும் 10 செ.மீ.உயரத்தில் தடுப்புச்சுவர் கட்டினால் (parapets) மழைத்தண்ணீர் உறிஞ்சுக்குழிக்கு வர இயலாது.

சில காலங்கள் கழித்து, கற்கள் மற்றும் செங்கற்களைச் சுத்தம் செய்து உறிஞ்சு குழியினைப் பராமரிக்கலாம்.

### திடக்கழிவு

**1. மூடியுடன் கூடிய குப்பைத்தொட்டி**

குப்பைத்தொட்டி பிளாஸ்டிக் அல்லது உலோகம் மூடியோடு இருக்கவேண்டும்.

குப்பைத்தொட்டி பெரிய அளவில் இருக்க வேண்டும்.

கொண்டுசெல்லக்கூடிய அளவிற்குக் குப்பைத் தொட்டி இருக்க வேண்டும். எலிகள், பூனைகள் மற்றும் நாய்களால் எளிதில் உடையாத குப்பைத்தொட்டிகளாக இருக்கவேண்டும்.

**2. போக்குவரத்து**

### இருசக்கர குப்பையை அள்ளிச்செல்லும் வண்டி

குறைந்த அளவில் குப்பைகளைக்கொண்டு செல்லக்கூடிய இரு சக்கர குப்பை வண்டி பயன்படுத்தவேண்டும்.





**திடக்கழிவினால் ஏற்படும் சுகாதார ஆபத்துக்கள்**

1. கொசுக்கள் இனப்பெருக்கத்திற்கான இடங்கள், ஈக்கள், எலிகள் மற்றும் இதர vermins மூலம் நோய்கள் பரவும்.
2. மண்புழுவுக்கு உணவு மற்றும் சுற்றித்திரிகிற மிருகங்களுக்கு
3. தீ விபத்து.

**திடக்கழிவுகளை அகற்றும் முறையான வழிமுறைகள்**

1. நகர்ப்புறங்களில் திடக்கழிவுகளை அப்புறப்படுத்தும் வசதிகள் உள்ளன.

   பின்வரும் நான்கு முறைகளைக் கையாளவும்.

   1. குடும்பங்களே திடக்கழிவுகளைச் சேர்த்து வைக்கலாம்.
   2. நகராட்சித் திடக்கழிவு சேகரிப்பு மையங்களுக்கு மாற்றலாம்.
   3. நகராட்சித் திடக்கழிவு சேகரிப்பு மையங்களில் சேகரித்துவைக்கலாம்.
   4. நகராட்சியினால் அகற்றலாம்.

**குடும்பங்கள் கடைப்பிடிக்கவேண்டிய கலவை உரம்**

இலைகள், புல், மாட்டு சாணம், பாசிகள் கலவை உரம் தயாரிக்கத்தேவைப்படுகிறது.

1. நகர்ப்புறங்களில் வசிப்பவர்கள் சமையல் கழிவுப் பொருட்களைச்சிறிய பள்ளங்களில் சேகரித்து வைக்கலாம்.
2. தேவையற்ற உணவுப் பொருட்கள், இலைகள், புல்கள் மற்றும் மிருகங்களுக்குரிய உணவுப் பொருட்கள் பெரிய அளவில் கலவை உரம் (NADEP) தயாரித்தல்.

**குப்பையை அகற்றுதல்**

குப்பைகளை வண்டிகள் மற்றும் டிராக்டர்களின் மூலம் அகற்றுதல் அல்லது சைக்கிள் ரிக்ஷா, குறைந்த அளவில் உள்ள குப்பைகளைச் சக்கர வண்டி மூலம் அகற்றலாம்.

**குப்பைகளை எரித்தல்**

எரிப்பதற்குப் பயற்சிக்கொடுக்க வேண்டும். மாசுக்கட்டுப்பாட்டு விதிமுறைகளைத் தெரிவிக்க வேண்டும். மருத்துவக்கூடங்களில் குப்பைகளை எரிக்கும் முறையைப் பயன்படுத்தலாம்.

## தன் சுத்தம்

தன் சுத்தம் தனிப்பட்ட நபர் ஒருவரின் சுகாதாரத்தைப் பற்றியும் மற்றும் அத்தனிப்பட்டவர் சுகாதாரத்தைப் பராமரிப்பதைப் பற்றிக் கூறும் ஒரு விஞ்ஞானம் ஆகும். பொதுவாக-தாயானவள் ஒரு குடும்பத்தில் குழந்தைகளின் தன்சுத்தத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பாள்.

**தன்சுத்தம் எதையெல்லாம் அடக்கியுள்ளது ?**

உடம்பின் தலையிலிருந்து பாதம்வரையுள்ள சுகாதார நலம் , அதாவது தலைமயிர், கண்கள், தொண்டை, காது, பல், தோல் போன்றவற்றின் நலம் பேணுதல் ஆகும். உணவுப்பழக்கம், சுகாதாரப்பழக்கம், தகுந்தாற்போல் துணி மற்றும் உடற்பயிற்சி போன்றவைகள் ஒருவரின் நல்ல சுகாதாரத்திற்கு நெருக்கமாகும்.

**நலம்**

நமது கண்கள் நம்மைச்சுற்றியுள்ள உலகத்தைப் பார்க்கப் பார்வையைக் கொடுக்கிறது.

**சமமற்ற பார்வைக்குரிய காரணங்கள்**

அ. வைட்டமின் குறைவால் இரவு குருட்டு நோய் அல்லது மாலைக்கண் மற்றும் வெள்ளைப்பூ இருப்பது.

**ஆ. கண்களுக்கான ட்டிராமாவின் காரணங்கள்**

தூசி மற்றும் புகை, கல்லின் ஒரு துண்டு அல்லது கண்ணாடி தம்ளர் தூள் கண்ணுக்கு அல்லது வெளிச்சமான ஒளி, ஊதாநிறக்கதிர்கள், வெல்டிங் மிசின் பற்றவைக்கும்போது.

## ஆரோக்கியம்

மக்கள் நல்வாழ்வு மற்றும் மாசு படிந்த கீழ்க்கண்ட காரணங்களினால் மாறுபடுகிறது.

1. கெட்ட ரசாயன பொருட்கள் தண்ணீரில் வந்துள்ளது.
2. கனிம உப்பு.
3. தண்ணீரில் மிதக்கும் தூசுகள்.
4. நுண்கிருமிகள்.



கீழ்க்கண்ட உதாரணங்கள்

1. மண் பாத்திர வண்ணப்பூச்சில் உள்ள காரீயம்.
2. சீருந்தில் உள்ள பழைய மின்கலம் இவை தண்ணீரில் கலந்திருந்தால் குழந்தைகளின் சாதாரண அறிவு வளராது. மேலும் பெரியவர்களுக்கு உயர் இரத்த அழுத்தம் ஏற்படும்.
3. நகராட்சி வழங்கும் குடிதண்ணீரில் குளோரைடு கலந்திருந்தால் அதனால் உடல் நலத்திற்குக்கேடு விளைவிக்கும்.

கீழ்கண்ட காரணங்களினால் தண்ணீரின் தன்மை கெடுகிறது.

1. நில மட்டத்திலுள்ள நீர் ஆதாரத்திற்கு அருகிலேயே அசுத்தம் செய்தல்.
2. குளிப்பது மற்றும் ஆடை துவைப்பது.
3. இறந்த கால்நடைகளைத் தண்ணீரில் மிதக்க விடுவது.
4. சாக்கடை நீரைச்சுத்தம் செய்யாமல் நீர் ஆதாரத்தில் கலப்பது.
5. தொழிற்சாலைக்கழிவுகள் ஆதாரத்தில் கலப்பது.
6. விவசாயப்பொருட்கள் தண்ணீரில் கலந்துவிடுவது, பறவைகளினால் மாசுபடிதல்.

நிலத்தடி நீர் ஆதாரத்தில் தண்ணீர் கெடுவதற் கான காரணங்கள் :

1. பாதுகாப்பு இல்லாத கிணற்றில் உள்ள தூசுகள்.
2. அழுக்குப்படிந்த கைகள் மற்றும் கயிற்றினால் தண்ணீர் இரைத்தல்
3. கழிவறை, உலர் கழிவறை மற்றும் அழுகச் செய்கின்ற அறை (septic tank) இவை 20 மீட்டருக்குக் குறைவான இடத்தில் இருத்தல்.

சுத்தமாக வைத்திருத்தல் மற்றும் ஆரோக்கியமாக வாழ வழிமுறைகள்

சுற்றுப்புறச் சூழ்நிலை பராமரிப்புக்குப் பொறுப்பாளி யார் ?

1. அரசாங்கம்
2. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி
3. யாரேனும் ஒருவர்
4. குடும்பம்

ஒவ்வொரு நகரமும் சுத்தமாக வைப்பதற்குப் பொறுப்பேற்றுள்ளது. ஆனால் ஒத்துழைப்பு இல்லாமல் அரசால் எல்லாவற்றையும் செயல்படுத்த முடியாது. நமது நகரங்கள் தொடர்ந்து சுத்தமில்லாமலிருப்பதால், இது சுகாதாரக்கேட்டை விளைவிக்கும்.

### சுற்றுப்புறத்தின் வகைகள்

1. சுத்தமான சுற்றுப்புறச்சூழ்நிலை
2. அழகான சுற்றுப்புறச் சூழ்நிலை
3. ஆரோக்கியமான சுற்றுப்புறச் சூழ்நிலை
4. அறிவுப்பூர்வமான சுற்றுப்புறச் சூழ்நிலை
5. பொருளாதாரம் உள்ள சுற்றுப்புறச் சூழ்நிலை

### சுத்தமான சுற்றுப்புக் கமிட்டி

ஒவ்வொரு வீட்டிற்கும் சொந்தமாகக் கழிப்பிட வசதி இருக்க வேண்டும். இதற்கு அரசு கடன் உதவி அளிக்கிறது. சிறப்புத் திட்டங்களும் இதற்காக உள்ளன.

### தனிப்பட்ட முயற்சிகள்-நான் என்ன செய்யலாம்

பிளாஸ்டிக் பை சாக்கடையைத் தடைப் படுத்தவதால், இதனைச் சாக்கடையில் போடக்கூடாது.

நாம் பிளாஸ்டிக் பைக்குப் பதிலாக பேப்பர் மற்றும் பருத்தியால் செய்யப்பட்ட பையை உபயோகப்படுத்த வேண்டும். நாம் ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும்.

தெருவில் ஒன்றும் போடக்கூடாது. குப்பைகளை நாம் நம் கையில் வைத்திருந்து பக்கத்தில் உள்ள குப்பைத் தொட்டியில் போடவேண்டும்.

நாம் நம்முடைய வீடு அதுக்குச் சுற்றிலுமுள்ள மற்றும் வீட்டுக்கு முன்புறம் உள்ள தெரு சுத்தமாய் வைக்கவேண்டும்.

### நமது அண்டை வீட்டுக்காரர்களுக்கு என்ன செய்யலாம்?

அண்டை வீட்டு பெண்கள், இளைஞர்கள், மற்றுமுள்ள ஆண்களும் ஒரு குழு அமைத்து, ஜீவித நிலவரம் முயற்சிகள் எடுக்கலாம். நான் மட்டும் மற்றும் எனது குடும்பத்தினர் கழிவறையை உபயோகித்தல், மலங்கழித்தபிறகு மற்றும் சாப்பிடுவதற்கு முன் கை அலம்பல் என்ற நற்குணங்கள் கடைப்பிடிக்கலாம். அண்டை வீட்டுச் சுற்றுப்புறம் மேம்பாடு செய்வதற்கு மற்றவர்களோடு சேர்ந்து பாடுபடலாம்.

### அழகான அண்டை வீட்டுச் சுற்றுப்புறம்

1. ஒரு காலி மனையைச் சமப்படுத்தி, சிறுவர் பூங்கா அமைக்கலாம்.
2. ஒவ்வொரு வீட்டிலும் சிறு மரங்களை வளர்க்கலாம்.
3. தண்ணீர் தேங்கும் இடங்களை நிரப்பலாம்.
4. அருகாமையிலுள்ள பள்ளிக்கூடத்தில் அழகாகவும், தூய்மையுள்ளதாகவும் வைக்கலாம்.
5. மரக்கன்றுகள் இருந்தால் அவைகளைப் பாதுகாத்து வளரவிடலாம்.

### சுகாதாரமுள்ள அண்டைவிட்டுச் சுற்றுப்புறம்

சில பெண்களைச் சுகாதார மற்றும் சுத்தம் என்பவைகளில் பயிற்சி கொடுத்து, சமுதாய நலப்பணியாளர்களாக வேலை செய்ய அமர்த்தலாம். ஒவ்வொரு தொண்டர்களும் அவசரத்தேவைக்குத் தேவைப்படும், ஒ.ஆர்.எஸ்.பாராசிட்டமல், ஆண்டி வோம்ஸ் ஆகிய மருந்துகளை வைத்து, விநியோகிக்கலாம். நடமாடும் சுகாதாரக்குழு நமது கிராமத்திற்கு வரும்பொழுது நமது குடும்பத் தினர்களை முகாமிற்கு அழைத்துச்செல்லலாம்.

எய்ட்ஸ், குடும்பக்கட்டுப்பாடு மற்றும் போதைப் பொருட்கள் உபயோகித்தல் சம்பந்தமான விவரங்களை ரகசியமாக மருத்துவர்களுக்குத் தெரிவித்து, அவர்களைக்கொண்டு தேவையான அறிவுரைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கலாம். ஒவ்வொரு பெண்களும் பயிற்சி பெற்ற தாயைக் கொண்டு பாதுகாப்புள்ள பிரசவத்திற்கு ஏற்பாடு செய்து தேவைப்படும் என்றால் அடுத்துள்ள ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லவேண்டிய வாகன வசதி ஏற்பாடு செய்யலாம்.

அயோடின் உப்பு மட்டும் பயன்படுத்தவதற்கு ஆவண செய்யலாம்.





### பொருளாதாரத் தன்மையுள்ள அண்டை விட்டுச் சுற்றுப்புறம்

1. நியாயவிலைக்கடை ஏற்பாடு செய்யலாம்.
2. சிக்கன மற்றும் கடன் வழங்கும் திட்டங்களை ஏற்படுத்தி மற்றும் நபார்டு நிறுவனங்களிலிருந்து அங்கத்தினர்களுக்குக் கடன் பெற ஏற்பாடு செய்யலாம்.
3. யு.பி.எஸ்.பி. என்ஆர்எஸ். ஆர்எம்கே. எஸ்.எஸ்.டி. திட்டங்களின்கீழ் பயன்பெறக் குடும்பத்தி னர்களைக் கண்டுபிடிக்கலாம்.
4. அண்டை வீட்டுக்குழு கிளப், எக்ஸ்னோரா மற்றும் இதர தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து சமுதாயத்துக்குத் தேவையான வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்வதற்கு அரசாங்க அலுவர்களுடன் தொடர்பு கொள்ளலாம். ★

# ஆதிதிராவிடர் - பழங்குடியினர் பெறும் கல்வி உதவிகள்

- சி.வி. சங்கர், இ.ஆ.ப.,
இயக்குநர்,
ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நல இயக்ககம்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

காலத்தால் அழியாதது கல்வி. தீயினால் அழியாததும் கள்வரால் அபகரிக்க முடியாததும், வெள்ளத்தால் அடித்துச் செல்ல இயலாததுமான கல்வி யாவரும் பெற்று அறிவுடைய மக்களாகத் திகழச் செய்யும் மிகப் பெரிய ஊற்று கல்விவள ஊற்று.

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பாக அமையும்.

எனவே, கல்வி அறிவு தமிழகத்திலுள்ள அனைத்து தரப்பு மக்களும் பெற்று உலக அரங்கில் தமிழ்ச்சமுதாயம் ஓங்கி நிற்க வேண்டி தமிழக அரசு கல்விக்கு முக்கியவத்துவம் கொடுப்பதோடல்லாமல் பொருளாதாரத்திலும், சமூக நிலையிலும், கல்வியிலும் மிகவும் அடித்தளத்திற்குத் தள்ளப்பட்டிருந்த தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களான ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியின மக்களுக்குச் சிறந்த பல கல்விச் சலுகைகளை அவ்வப்போது நிறைவேற்றி வருகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் வழங்கப்படும் இச்சலுகைகள் ஒவ்வொரு மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**கல்வி**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனங்களில் கல்வி பெற்றோர் முறையே 46.74 விழுக்காடும் 27.89 விழுக்காடும் மட்டுமே உள்ளனர். இந்த சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் முன்னேற கல்வி மிகவும் அடிப்படை தேவை என்று கருதி ஆதிதிராவிட இனத்தவர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்குக் கல்வி அளிப்பதில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

**அவைகள்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்திற்காக இத்துறையால் 1251 பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் 1017 ஆதிதிராவிடர் பள்ளிகள், 234 பழங்குடியினர் பள்ளிகள் அடங்கும். தற்போது இப்பள்ளிகளில் 2.38 இலட்சம் மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

**பள்ளிகளை மேல்நிலைப்படுத்துதல்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகாமையிலேயே அவர்களுக்கு உயர் கல்வி அளிக்க வேண்டியது அவசியம் என்று கருதி, இத்துறை பள்ளிகள் அதற்கு அடுத்த மேல்நிலைக்கு படிப்படியாக நிதி நிலைமையினையும் அவசியத்தையும் கருத்தில் கொண்டு உயர்த்தப்பட்டு வருகின்றன.

**கல்வி மேம்பாட்டிற்கான வசதிகள்**

ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவ, மாணவியர்களின் பள்ளிப் படிப்பை இடையில் விட்டுவிடுவோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இதற்கு முக்கியக் காரணம் அவர்களுடைய பொருளாதார நிலையே. இவர்களின் பெற்றோர்களின் பொருளாதாரச் சுமைகளைக் குறைப்பதற்கும், பள்ளிப்படிப்பை இடையில் விட்டுச் செல்லும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கையைப் பெருமளவு குறைக்கும் நோக்கத்துடன் கல்வி பயிற்று வித்தலையும், மிகவும் பயனுள்ளதாகவும், ஆர்வமுள்ளதாகவும் ஆக்குவதற்குச் சலுகைகள், உதவிகள் மற்றும் ஊக்கத் தொகைகள் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**புத்தகங்கள், குறிப்பேடுகள் மற்றும் கரும்பலகைகள் வழங்குதல்**

இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் அனைத்து வகுப்புகளில் மாணவ, மாணவியருக்கும் (சாதி வேறுபாடின்றி) பாடபுத்தகங்கள், குறிப்பேடுகள் பள்ளி ஆண்டின் தொடக்கத்தில் இலவசமாக வழங்கப்படுகிறது. 1 முதல் 3ம் வகுப்புகளில் பயிலுபவர்களுக்குக் கரும்பலகைகள் வழங்கப் படுகின்றன.

**சீருடைகள்**

இத்துறையால் நடத்தப்படும் பள்ளி/விடுதிகளில் 12ம் வகுப்பு வரையில் பயிலும் அனைவருக்கும் 2 இணைச் சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

**கல்வியின் தரத்தினை உயர்த்த வழிகள்**

இத்துறையின் மூலம் நடத்தும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின்கல்வித் தரத்தினை உயர்த்த பல வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**சிறப்புப் பயிற்சி**

பத்தாம் வகுப்பு மற்றும் பனிரண்டாம் வகுப்பில் பயிலும் மாணவர்களில் சராசரி மற்றும் சராசரிக்கும் குறைவான மாணவர்களைக் கண்டறிந்து அவர்களின் முன்னேற்றத்திற்காகத் தனிக் கவனம் அளிக்கப்படுகிறது. பத்தாம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்கள் பொதுத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெறுவதற்கு ஏதுவாக அரசு பள்ளி இறுதித்தேர்வு போன்ற வகையில் மாதிரி பொதுத் தேர்வு நடத்தப்படுகிறது.



சிறப்பு வழிகாட்டிகள் தயாரிக்கப்பட்டு பத்து மற்றும் பனிரெண்டாம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

**பள்ளிகளில் கணிப்பொறி பயிற்சி**

முதன் முறையாக இத்துறையில் உள்ள 40 மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.120 இலட்சம் மதிப்பீட்டில் கணிப்பொறி பயிற்சி ஒரு பாடமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**விடுதிகள்**

பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கு விடுதியில் தங்கிப்பயிலும் வசதி தொடர்ந்து அளிக்கப்படுகிறது. இம்மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000க்கு மிகாமல் இருக்கவேண்டும்.

**உணவுக் கட்டணங்கள்**

அரசு விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகளில் தங்கியுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுக் கட்டண வீதங்கள் கீழே கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளன:

| விடுதியின் வகை | மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்று ரூ. பை |
|---|---|
| 1. சென்னை மாநகரிலுள்ள கல்லூரி மற்றும் தொழில்பயிற்சி மாணவ, மாணவியர்கள் அரசு விடுதி | 202.50 |
| 2. வெளியூர் பகுதியிலுள்ள கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி மாணவ, மாணவியர் அரசு விடுதிகள் | 197.50 |
| 3. உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர் விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டுறைவிடப் பள்ளி | 180.00 |

## தமிழ்நாடு தொழிற்கல்வி நுழைவுத் தேர்விற்குப் பயிற்சி

மத்திய அரசின் பயிற்சி மற்றும் தொடர்புடைய திட்டங்களின் கீழ் தமிழ்நாடு தொழிற்கல்வி நுழைவுத் தேர்வு எழுத ஆதிதிராவிட மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இச்சிறப்புப் பயிற்சி வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறையினரால் 25 நாட்களுக்கு 19 மையங்களில் நடத்தப்படுகின்றன.

1. இந் நுழைவுத் தேர்வுக்குக் கட்டணம் ஏதும் இல்லை.
2. மூன்று முறை இந்நுழைவுத் தேர்வு எழுதலாம்.
3. வயது வரம்பு ஏதும் இல்லை.




### ஊக்கத் தொகை

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தவும் அவர்களிடையே படிப்பில் போட்டி மனப்பான்மையை உருவாக்கவும் கீழ்க்கண்ட ஊக்கப்பரிசுகள் வழங்கப்படுகிறது.

### மாநில அளவில்

1. ப்ளஸ் 2 தேர்வு - ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு ரூ.5000
2. எஸ். எஸ். எல். சி. (பத்தாம் வகுப்பு) ஒரு மாணவர் மற்றும் மாணவி ரூ.3000

### மாவட்ட அளவில்

1. ப்ளஸ் 2 தேர்வு - ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி ரூ.3000
2. எஸ்.எஸ்.எல்.சி.(பத்தாம் வகுப்பு) மூன்று பரிசுகள்

முதல் பரிசு - ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு (ஒவ்வொருவருக்கும்) ரூ.1000

இரண்டாம் பரிசு - ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு (ஒவ்வொருவருக்கும்) ரூ.500

மூன்றாம் பரிசு-ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு (ஒவ்வொருவருக்கும்) ரூ.300

### அறிவுக்கூர்மைப் பரிசு

ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்தாம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெறும் இரண்டு ஆதிதிராவிட மாணவர்கள், இரண்டு மாணவிகள், மதம் மாறிய ஆதிதிராவிட கிறித்துவ மாணவர்கள் இரண்டு, மாணவிகள் இரண்டு மற்றும் பழங்குடியின இருமாணவர்கள் மற்றும் இரு மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் மேற்படிப்பினைத் தொடர அரசு உதவி செய்கிறது. இத்திட்டத்தில் வருமான வரம்போ விடுதியில் தங்கியிருத்தல் போன்ற நிபந்தனைகள் எதும் இல்லை. இப்பரிசுத் தொகை முதலாண்டுக்கு ரூ.800 வீதமும் அடுத்து வரும் ஆண்டுகளுக்கு ஆண்டுக்கு ரூ.960 வீதமும் வழங்கப்படுகிறது. இப்பரிசுத் தொகை அம்மாணவர் படிப்பினைத் தொடர்ந்தால் ஆறு ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

### காந்தி நினைவு பரிசுத் தொகை

காந்தி நினைவு பரிசுத் தொகை மேல்நிலைப் பள்ளித்தேர்வில்,தேர்ச்சி பெற்று மேற்படிப்பினைத் தொடரும் இந்து ஆதிதிராவிட மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படுகிறது. கல்வி உதவித் தொகையுடன் இப்பரிசுத் தொகை கூடுதலாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மதிப்பெண் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவியும் இந்தத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இப்பரிசுத் தொகை முதல் ஆண்டுக்கு ரூ.1500-ம் அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ரூ.1000 வீதம் வழங்கப் படுகின்றன.

### தகுதிவழிவகை பரிசுத்தொகை

தகுதி வழிவகை பரிசுத்தொகை, காந்தி நினைவுப் பரிசுத் தொகையைப் போல் ஒவ்வொரு

மாவட்டத்திலும் மதம் மாறிய ஆதிதிராவிடர் கிறித்துவ மாணவர் ஒருவருக்கும் மாணவியர் ஒருவருக்கும் பழங்குடியினரைச் சேர்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கும் வழங்கப்படுகிறது.

### முதமைச்சரின் தகுதிப் பரிசு

12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவர்களை ஊக்குவிக்க ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதி திராவிடர் கிறித்துவ மாணவர்களில் முதல் 1000 பேருக்கும், மாணவிகளில் 1000 பேருக்கும் அவர்களின் மேல் படிப்பினைத் தொடர ஆண்டுக்கு ரூ.1500 வீதம் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. முறைப்படி பெறும் கல்வி உதவித் தொகையுடன் இப்பரிசுத் தொகையும் கூடுதலாக வழங்கப்படும்.

### கல்வி உதவித்தொகை மற்றும் சலுகைகள், பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள் வழங்குதல்

பொதுப் பள்ளிகளில் 1-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் சத்துணவு திட்டத்தின் கீழ் இலவசமாக பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. 9 மற்றும் 10-ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர் மாணவ மற்றும் பழங்குடி இன மாணவர்களுக்கு இத்துறை மூலம் பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.



பொதுப் பள்ளிகளில் 4-வது முதல் 10-வது வகுப்பு வரையில் பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மற்றும் மதம் மாறிய கிறித்துவர் இன மாணவர்களுக்கு இலவசமாகக் குறிப்பேடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### 10ஆம் வகுப்பு படிப்புக்கு முந்தைய படிப்பிற்கான கல்வி உதவித் தொகைகள்

6 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்குச் சிறப்பு கல்வி கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. மேலும் இக்கல்வி நிறுவனங்களுடன் இணைந்த மாணவரில்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகைகளும் வழங்கப்படுகின்றன.

இவ்விடுதி வசதி கல்வித் தொகைகள் வழங்குவதற்கு அவர்களின் பெற்றோர்/பாதுகாவலர் வருட வருமானம் ரூ.50,000க்கு மேற்படாமல் இருக்க வேண்டும். இவ்விடுதி கல்வி உதவித்தொகைகள் ஆண்டொன்றுக்கு ரூ.250 முதல் ரூ.300 வரை மாணவர்களுக்கும், ரூ.300 முதல் ரூ.350 மாணவியர்களுக்கும் அவரவர்கள் பயிலும் வகுப்புகளுக்கு ஏற்றவாறு வழங்கப் படுகிறது.

### கல்வி உதவித் தொகைகள்

சுகாதாரமற்ற தொழில்களில் அதாவது, உலர் கழிப்பிடம் சுத்தம் செய்தல், தோல் பதனிடுதல், தோலுரித்தல் மற்றும் துப்புரவுத் தொழில் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் குழந்தைகளுக்குச் சாதி, மத வேறுபாடின்றி மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. வருமான வரம்பு இல்லை. விடுதியில் தங்கி பயிலாதோர் மற்றும் விடுதியில் தங்கி பயில்வோர் ஆகியவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகைகளின் விவரம் பின்வருமாறு :

| | | விடுதியில் தங்கி பயிலாதோர் | விடுதியில் தங்கி பயில்வோர் |
|---|---|---|---|
| 1. | முதல் 5 வகுப்பு வரை | மாதம் ரூ. 25 | 3-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை மாதம் ரூ.200 |
| 2. | 6 முதல் 8 வகுப்பு வரை | மாதம் ரூ. 40 | |
| | 9 மற்றும் 10 வகுப்பு வரை (10 மாதங்களுக்கு மட்டும்) | மாதம் ரூ. 50 | 9 மற்றும் 10-ம் வகுப்பு வரை மாதம் ரூ. 250 |

மேலும் அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ஒட்டு மொத்த மானியமாக ரூ.500 வழங்கப்படுகிறது.

### 10ஆம் வகுப்பிற்குப் பிந்தைய படிப்பிற்கான உதவித் தொகை (மத்திய அரசு உதவித் தொகை திட்டம்)

விடுதியில் தங்கிப்பயிலும் மற்றும் விடுதியில் தங்கிப்பயிலாத ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு பத்தாம் வகுப்பிற்குப் பிந்தைய படிப்புக்குக் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்படுகிறது. மாணவர்களது பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.44500க்கு மேற்படாமல் இருக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் இரு குழந்தைகள் மட்டுமே இச்சலுகைகள்பெறத் தகுதியுடைவர்கள். பெண்களுக்கு இத் தடை நீக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்குப் பராமரிப்புப்படி, கல்வி நிலையங்களுக்குச் செலுத்த வேண்டிய கட்டாயக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் முதலியவை வழங்கப்படுகிறது. விடுதியில் தங்கிப் பயிலாதவர்களுக்கு மாதம் ரூ.90 முதல் ரூ.190 வரையிலும், விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு மாதம் ரூ.150 முதல் ரூ.425 வரையிலும் பராமரிப்புப்படி வழங்கப்படுகிறது.

### மாநில அரசின் சிறப்புப் படிப்புதவித் திட்டம்

10-ஆம் வகுப்பிற்குப் பிந்தைய படிப்பு பயிலுகின்ற ஆதிதிராவிட, பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு அவர்களது பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,000க்குக் குறைவாக இருப்பின், இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பராமரிப்புப் படியாக மாதம் ரூ.65 முதல் ரூ.125 வரை விடுதியில் தங்கி பயிலாதவர்களுக்கும், மாதம் ரூ.115 முதல் ரூ.280 வரையில் விடுதியில் தங்கிப் பயில்பவர்களுக்கும் வழங்கப்படுகிறது. பட்டப் படிப்பிற்குப் பிந்தைய படிப்பிற்கு வழங்கப்படும் மத்திய அரசு கல்வி உதவித் தொகைகள் மற்றும் மாநில அரசின் கல்வி உதவித் தொகைகள் வழங்குவதற்கு அந்தந்தக் கல்வி நிலையத் தலைவர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### இலவச கல்வி

மத்திய அரசு கல்வி உதவித் தொகைகள் மற்றும் மாநில அரசின் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்படாவர்களுக்கு அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் கணக்கில் கொள்ளாமல் அவர்களது பட்டப்படிப்பிற்குச் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வு கட்டணம் ஆகியவைகள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப் படுகிறது. தொழில் கல்வி பயில்வோரின் பெற்றோரின், பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.15,000-க்கு மிகாத குடும்பத்தில் முதல் பட்டதாரிகளாக இருப்பவர்களுக்கு இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

### கடன் உதவித் தொகை

தொழில் கல்வி பயிலும் மாணவர்கள் (அதாவது பொறியியல், மருத்துவம் மற்றும் வேளாண்மை) அவர்கள் தங்கிப் பயிலும் விடுதிகளுக்கு அவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தொகைகளை விட அதிகமாகச் செலவு செய்திருந்தால் அவர்களுக்கு இத்தொகை வழங்கப்படுகிறது.

பட்டப்படிப்பு படிப்போர்களுக்கு ஆண்டுக்கு ரூ.6500-ம் தொழில் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு பயில்வோர்க்கு ரூ.7000-ம் கடனாக வழங்கப்படும். கல்விக் கடன் உதவித் தொகை வழங்கும்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : வெ. இறையன்பு, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை—தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927

அதிகாரம் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**பரிசுத்தொகை திட்டம்**

பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழிற்கல்வி படிப்புகளில் முதல் தடவையிலேயே 60 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிட, பழங்குடியின மாணவ, மாணவியருக்குப் பரிசுத் தொகையாக ரூ.1000 முதல் ரூ.1500-ஆக மொத்தம் 1000 மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

**ஆதிதிராவிட மாணவிகளுக்கு ஊக்கத் தொகை**

படிப்பறிவில் பின் தங்கிய மாவட்டங்களான தருமபுரி, திருவண்ணாமலை சம்புவராயர், விழுப்புரம் ராமசாமி படையாட்சியார், தென்னாற்காடு வள்ளலார், காமராஜர், அண்ணா எம்.ஜி.ஆர்., வடாற்காடு அம்பேத்கர், சேலம், ராஜாஜி, திருச்சிராப்பள்ளி, பெரும்பிடுகு முத்திரையர், கரூர் தீரன் சின்னமலை, பெரம்பலூர் திருவள்ளுவர், நாகப்பட்டினம் காயிதே மில்லத், திருவாரூர் ஏ. டி. பன்னீர்செல்வம் ஆகிய மாவட்டங்களில் பெண் கல்விக்கு முன்னுரிமை அளிக்கவும், ஆதிதிராவிட பெண் குழந்தைகள் இடையில் நின்று விடுவதைத் தடுக்கவும் அங்குள்ள பள்ளிகளில் மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 20,000 ஆதிதிராவிட மாணவிகளுக்கு ஒட்டு மொத்த மானியமாக ரூ.500 வீதம் வழங்கப்படுகிறது. மாநிலம் முழுதும் ஆறாம் வகுப்பில் சேர்ந்து படிக்கும் 30,000 ஆதிதிராவிட மாணவியர்க்கு மாதம் ரூ.100 வீதம் வழங்கப்படுகிறது.

**புத்தக வங்கி**

மருத்துவம், பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி படிப்பு ஆகிய தொழில் நுட்ப படிப்புகள் பயிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்கள் பயன்பெறும் வகையில் புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு போஸ்ட் மெட்ரிக் உதவித் தொகை பெற்று மருத்துவம், பொறியியல், வேளாண்மை மற்றும் கால்நடை மருத்துவம் தொழில்நுட்ப்பபடிப்பு பயிலும் மாணவர்களுக்கு இரண்டு மாணவர்களுக்கு ஒரு செட் புத்தகம் வீதம் வழங்கப்படுகிறது.


இப்போது விற்பனையில்...

படித்து மகிழுங்கள்

தமிழரசு

இலக்கிய மலர்

260 பக்கங்கள்

விலை ரூ.10 மட்டும்

கிடைக்கும் இடங்கள்:

- தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 2.
- பாரதியார் நினைவு இல்லம், திருவல்லிக்கேணி.
- வள்ளுவர் கோட்டம், நுங்கம்பாக்கம்.
- அண்ணா சதுக்கம், (நூலகம்)

விரைவில் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகங்களில் கிடைக்கும்.

அஞ்சல் செலவு தனி



## ஆசிரியர் மடல்

பிறக்கும் பொழுதே ஒருவன் மனிதனாகப் பிறந்து விடுவதில்லை.

இறப்பதற்குள்ளாவது அவன் மனிதனாகப் பரிணாம வளர்ச்சி அடைவதுதான் மிகப் பெரிய சாதனையாக இருக்கமுடியும்.

பரிணாம வளர்ச்சி என்பது ஒவ்வொரு நொடியிலும் நமக்குள்ளே நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

நம்மை மனிதனாக மாற்றுவதும் நமக்குள் ஒளிந்து இருக்கும் மனிதத்தை தேடிக் கண்டுபிடிப்பதும் அன்பு என்கிற மொழியினால் மட்டுமே அகப்படுகிறது.

நமக்குள் எதைப் பிடிக்கிறதோஅதற்குக்காரணங்கள் சொல்வது இல்லை.

பிடிக்காததைப் பற்றித்தான் காரணங்களைத் தேடி கண்டு பிடிக்க வேண்டியதாக இருக்கிறது.

பிடிப்பதும் அன்பு கொள்வதும் இயல்பானவை.

வெறுப்பு கொள்வதற்கும் கோபம் அடைவதற்கும் நாம் முயற்சி செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அன்பு கொள்ளும்போது சக்தி சேருகிறது.

கோபம் கொள்ளும்போது சக்தி விரயமாகிறது. எல்லோரும் புன் சிரிப்போடு ஒன்று கூடும்பொழுது, காற்று மண்டலமே நறுமணமாக மகிழ்ச்சிப் பூக்களை நம் மீது அட்சதைகளாகத் தூவுகிறது.

அன்பு இருதரப்பினரையும் உயர்த்துகிறது; மேன்மைப் படுத்துகிறது.

பகிர்ந்துகொள்ளப் பகிர்ந்துகொள்ள அதிகம் ஆகிற தன்மை அன்புக்கு மட்டுமே உண்டு.

நாம் அன்போடு பார்க்கிறபோது, பாறை கூட சிற்பமாகி விடுகிறது.

கோபத்தோடு நோக்குகிறபோது பஞ்சு கூட திடமாகி விடுகிறது.

இந்த வாழ்க்கையை இன்னொரு முறை நாம் வாழப் போவது இல்லை.

வேகமாக சுழலும் புவியை நிறுத்தச்சொல்லி அதிலிருந்து எகிறிக் குதிக்க நம்மால் முடியாது. ஆனால் நம்மால் ஒரு புன்னகையைச் சிந்த முடியும். அதற்குச் செலவு ஏதும் இல்லை. அதனாலேயே அது விலைமதிக்க முடியாததாக இருக்கிறது!



தூய
பட்டு.
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி
HTA.7556.95

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

